உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14வள்ளுவர் ஆண்டு 2030ஐப்பசி 30 செவ்வாய்க்கிழமை (16-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 304

# பயணிகள் விமானம் கட்டுநாயக்காவுக்கு!

## நாளை மறுதினம் முதல் தற்காலிக ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவம்பர் 16

பலாலிக்கும் – இரத்மலானைக்கும் இடையில் 'ஹெலிருர்ஸ்' நிறுவனத்தினால் நடத்தப்படும் பயணிகள் விமான சேவை நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் பலாலிக்கும் – கட்டுநாயக்காவுக்கும் இடையில் நடத்தப்படும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கட்டுநாயக்காவிமானநிலையத்தில் இருந்து பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டு நீர் கொழும்பு வீதியில் குரான சந்தியில் விடப்படுவர் என்

(11 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப தலையிடிக்குத் தலையணையை மாற்றி இருக்கினம்......!

# கொழும்பில் நில அதிர்வு!

கொழும்பு, நவ. 16

கொழும்பு நகரில் நகர மண்டபப் பகுதியிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் நேற்று முற்பகல் 11-55 மணிக்கு நில அதிர்வு ஒன்று ஏற்பட்டது.

அந்தப் பகுதியில் உள்ள அலுவலகங்களிலுள்ள மரத்தளபாடங்கள், சிறிய உபகரணங்கள் என்பன சில விநாடிகள் அதிர்ந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

பூமி அதிர்ச்சியை அளவிடும் கருவிகள் நாட்டில் இல்லாமையால் இந்த அதிர்வு தொடர்பான விவரங்களை அறிய முடியவில்லை என்று தேசிய விஞ்ஞான மன்றத் தலைவர் பேராசிரியர் கபில தகநாயக்க தெரிவித்தார்.

இந்த அதிர்வு தொடர்பாக இந்திய வானியல் ஆய்வு நிறுவனத்துடன் இலங்கை அதிகாரிகள் தொடர்பு கொண்டனர்.

இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட அதிர்வே இதற்குக் காரணம் என அந்த நிறுவனம் இலங்கைக்குத் தெரிவித்துள்ளது.

(இ-3-6-7)

# நியமனப்பத்திரங்கள் இன்று தாக்கலாகும்

## 13 பேர் போட்டியிடுவர்

கொழும்பு, நவ 16

அடுத்த மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று தாக்கல் செய்யப்படவிருப்பதை அடுத்து கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை நியமனப்பத்திரங்களை வேட்பாளர்கள் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் வைத்துத் தாக்கல் செய்வர்.

நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்படும் சமயத்தில் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுப்பதற்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட 13 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

• தமிழர் சார்பில் எவரும் இத்தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தவில்லை.

தமிழர் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரைநிறுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் பின்னர் அது கைவிடப்பட்டது.

(இ-3-7-8)

# குண்டுவெடிப்புக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும்

## ஐ. தே. க. செயலாளர் கோரிக்கை

கொழும்பு, நவ. 16

"எப்பாவலவில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கான முழுப்பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும்" என்று ஐ.தே.க. செயலாளர் காமினி அத்துக்கோறல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படி அரசு மீது குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கத்தின் ஆதரவாளர்களே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருந்துள்ளனர் என்பதற்கு எம்மிடம் ஆதாரம் உண்டு.

ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அவரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.

இந்தச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

எனவே இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள சுதந்திரமான விசாரணைக்குழு ஒன்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கலைப்பீட மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்–பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த 3 ஆம் ஆண்டு மாணவன் செல்வநாயகம் சுகந்தனைவிடுவிக்கக்கோரி மீண்டும் மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று ஆரம்பமாகியது.

கடந்தமாதம் 25 ஆம்திகதி அந்த மாணவன் கைதுசெய்யப்பட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பகிஷ்கரிப்புப் போராட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த மாணவனை விடுவிப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றி

(10ஆம் பக்கம் பார்க்க)

# காயமடைந்த சப் இன்ஸ்பெக்டர் மரணம்

கொழும்பு, நவ. 16

அனுராதபுரம் மாவட்டத்தில் எப்பாவல என்னுமிடத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த ஐ.தே.க. கூட்டத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் காயமடைந்த சப் இன்ஸ்பெக்டர் நேற்றுக் காலை அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இந்தக் குண்டு வெடிப்பில்

(10 ஆம்பக்கம் பார்க்க)

# ஐ. தே. கட்சி எம். பி. ஜயலத் வவுனியா நகர் விஜயம்

வவுனியா, நவ. 16

வவுனியா நகரில் இருந்து இடம்பெயர்ந்து ஆசிக்குளம் இராஜேந்திரக்குளம் ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள மக்களை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அவர் கேட்டறிந்தார்.

வவுனியா நகரில் 10 சதவீதமான மக்களே காணப்பட்டனர் என்றும் –

கடைகள், அரச அலுவலகங்கள் பூட்டப்பட்டு நகர் வெறிச்சோடிக் காணப்பட்டது என்றும் –

தனியார் வங்கி ஒன்று ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் பணியை நேற்று மேற்கொண்டிருந்தது என்றும் – அவர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தமக்கள் பாதுகாப்பு, வதிவிடம், உணவு, மருந்து ஆகியவை தொடர்பாகப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் –

சர்வதேச தொண்டுஅமைப்புக்கள் அவர்களுக்கு உதவி வருகின்றன என்றும் — அவர் தெரிவித்தார்.

அதேநேரம் – அரசஊழியர்கள் காலை அலுவலகங்களுக்குச் சென்று கையொப்பம் வைத்து விட்டுச் சென்றனர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் வந்த டிரக் விபத்தில்

யாழ்ப்பாணம், நவ. 16

பலாலியில் இருந்து படையினருடன் யாழ் நகர் நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவ டிரக் ஒன்று நேற்று நண்பகல் 1.15 மணியளவில் பழம்றோட் சந்தியில் விபத்துக்குள்ளானது.

இந்த டிரக்கில் பயணம் செய்த 20க்கு மேற்பட்ட படையினரும் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இதில் இருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் படுகாயம் அடைந்ததாகக் கூறப்பட்டது.

(இ-3-86-185)

# அத்தியாவசியப் பொருள்கள் ப. நோ. கூ. சங்கங்கள் மூலம்

## செயலகக் கூட்டத்தில் நேற்றுமுடிவு

யாழ்ப்பாணம், நவ. 16

மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை தட்டுப்பாடு எதுவும் இன்றி ப.நோ.கூ. சங்கங்கள் ஊடாக விநியோகம் செய்வதென யாழ். செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதன், மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

யாழ் மாவட்டத்தின் உணவு மற்றும் எரிபொருள்களின் கையிருப்புத் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதிக்குத் தேவையான அரிசியும் —

ஜனவரி மாதம் வரையான காலப்பகுதிக்கு தேவையான சீனி, மா ஆகியனவும் — செயலகத்தில் கையிருப்பில் இருப்பதாக அரச அதிபர் தெரிவித்தார்.

அடுத்த மாதத்தில் உண

(10 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மோட்டார் தாக்குதல்!

கொழும்பு, நவ. 16

மன்னார் மாவட்டத்தில் பள்ளமடு, மருதமுனை ஆகிய இடங்களில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது மோட்டார் தாக்குதலை விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை நடத்தினர் என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

படையினர் பதில் தாக்குதல் நடத்திப் புலிகளின் தாக்குதலை முறியடித்து விட்டனர் என்று மேலும் அது தெரிவித்தது.

மருதமுனையில் நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் ஒன்பது உறுப்பினர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை பிரதேச செயலர் பிரிவில்
# 142 குடும்பங்களுக்கு 5,000 ரூபா

வலிகாமம் மேற்கு நவ. 16
சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 142 பேருக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இதற்கான நிதி யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வு புனரமைப்பு கிளையில் இருந்து பிரதேச செயலகத்துக்கு கிடைத்துள்ளது.

கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக கொடுப்பனவு பெறுவோர் எண்ணிக்கை வருமாறு:-

அராலி தெற்கு — 21 அராலி வடக்கு — 9 வட்டுத் தெற்கு — 19 வட்டு தென் மேற்கு—1 தொல்புரம்மேற்கு —16 சுழிபுரம் மேற்கு — 20 சுழிபுரம் மத்தி —31 சித்தன்கேணி — 02 சங்கானை மேற்கு — 20 சங்கானை மத்தி— 3 பத்துகிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் சேர்ந்த 142 பேரும் மீளக்குடியமர்வுக்கான நிவாரணத்தை முன்னர் குறிப்பிட்ட வங்கிகளுக்கு சென்று பெற்றுக்கொள்ள முடியும். தத்தமது கிராம உத்தியோகத்தர்களிடம் தொடர்பு கொண்டு பெயர்களை உறுதிப்படுத்திய பின்னர் வங்கிகளுக்குச் சென்று பணத்தை இந்த வாரம் முதல் பெற்றுக் கொள்ள முடியும் என பிரதேச செயலக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

## தேடுவாரற்ற நிலையில் சைக்கிள்

தென்மராட்சி, நவ 16
சாவகச்சேரி நவீன சந்தை முன்பாக கடந்த மூன்று நாள்களாக தேடுவாரற்று காணப்பட்ட சைக்கிள் படையினரால் நேற்று முன்தினம் எடுத்துச் செல்லப்பட்டது.

(ஐ-117)

## நள்ளிரவு ஆடு திருடிய இளைஞர் சிக்கினார்

அளவெட்டி, நவ 16
ஊரடங்கு அமுலில் இருந்த நள்ளிரவு வேளை வீடுஒன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்த ஆடு ஒன்றைக் களவாடிச் சென்ற இளைஞன் பிடிபட்டான்.

ஆடு எழுப்பிய சத்தத்தைத் தொடர்ந்து விழித்துக் கொண்ட வீட்டுக்காரர்புத்தி சாதுரியமாகச் செயற்பட்டமையால் ஆட்டுடன் இளைஞன் பிடிபட்டான் வேறு இருவர் தப்பி ஓடி விட்டனர்.

பிடிபட்ட இளைஞன் மின் கம்பமொன்றுடன் கட்டிவைக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்கு விடப்பட்டார்.

கோண்டாவில் ரயில் நிலைய வீதி ஞானவீர சன சமூக நிலையத்தடியில் இச் சம்பவம் நடைபெற்றது.

இப் பகுதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த களவுகளுக்கும் இந்தத் திருடர் கோஷ்டியே காரணமாக இருக்கலாம் எனப் பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர்.

(ஐ-13)


## இராமநாதன் நுண்கலைக்கழகம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இசைத்துறை நடனத்துறை

இசைத்துறை, நடனத்துறை முதலாம் ஆண்டு விரிவுரைகள் 15—11—99 இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இசைத்துறை நடனத் துறைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் உடனடியாக விரிவுரைகளுக்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

— பதிவாளர்

[ /9846]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### இராசரத்தினம் உதயகுமார்
(உதயன்)
[இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்]

ஆண்டவன் அளிப்பு 1956 - 06 - 25 | அநியாய அழிப்பு 1998 - 10 - 28

திதி: 16 - 11 - 1999

கண்ணீரைக் கடலாகப் பெருக்கி என்ன?
கசிந்துருகிப் புலம்பிநாம் அழுதும் என்ன?
எண்ணமெலாம் நிறைந்திட்ட உதயனே நீ
இவ்வுலகம் திரும்பிவரப் போவதில்லை
மண்ணினிலே நிலையாக வாழ்ந்தார் இல்லை
மனம் இதனை ஏற்றிடவே மறுக்குதையா!
விண்ணார்ந்த புகழுடலை விட்டுச் சென்றாய்
மேன்மையதை நினைந்தமைதி கொள்கின்மோமே.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், மனைவி, சகோதரர்கள், சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார், மைத்துனன்,
மைத்துனி, சித்தப்பா, மருமக்கள்,
பெறாமக்கள்.

95, நாயன்மார் வீதி,
நல்லூர்.

(71006)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



செல்வன்

### துரைராசா கதிர்காமநாதன் (தம்பி)

தோற்றம்: 06 - 06 - 1972 | மறைவு: 17 - 10 - 1999

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (16-11-99) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் பங்கு கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தாய், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்.

து. ஜெகநாதன் (சிறி),
8/5, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(71011)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணபதிப்பிள்ளை திரவியம்

சுன்னாகத்தைப்பிறப்பிடமாகவும் தற்போது 396, ஸ்ரான்லி வீதியில் வசித்தவருமாகிய திருமதி கணபதிப்பிள்ளை திரவியம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற குருநாதர் - நாகமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அருந்ததி, ராஜலிங்கம், செல்வராஜா, தங்கேஸ்வரி, கோகிலராஜா சரஸ்வதி, காலஞ்சென்ற பவளராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரலிங்கம், சிவபாக்கியம், மலர், ஜீவானந்தன், செல்வம், ஜெயசுதா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16-11-99) பிற்பகல் 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
கோகிலராஜா
(மகன்)

396, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9851)

### திருமதி மேரி லூயீசம்மா இராசரத்தினம்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி லூயீசம்மா இராசரத்தினம் 15-11-99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு திருமதி மனுவேற்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி வஸ்தியாம்பிள்ளையின் அன்பு மருமகளும் நீற்றா, பெனிற்றா (கனடா), டொனிற்றா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிரான்சிஸ், அன்றூ, சாள்ஸ் ஆகியோரின் மாமியாரும் டிலாந்தி, டில்கான், றொஷான், றொஷாந்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற யோசவ், பொன்றோஸ் மற்றும் வேதநாயகம், ஞானப்பிரகாசம், நேசம்மா, பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16-11-99) செவ்வாய்க்கிழமை 3.00 (இ.நே) மணியளவில் சில்லாலை கதிரை மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சு. பிரான்சிஸ்
(மருமகன்)

27, 1ஆம் ஒழுங்கை,
பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(71012)

ராஜா
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
ரஜனி - ரோஜா
மற்றும் பலர் நடித்த
உழைப்பாளி
நாளை முதல்
செல்வா
10-30, 2-30.
(சி/9813)

லிபேட்டி அச்சுவேலி.
பிரசாந், பிரீதி
நடித்த
ஹலோ
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070 - 212678
(71007)

நாகம்ஸ்
சுன்னாகம்
விஜய் — சாளினி
நடித்த
காதலுக்கு மரியாதை
காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெரீப்பை உடன் விடுவிக்குமாறு டேர்பன் உச்சி மாநாட்டில் தீர்மானம்

டேர்பன், நவ. 16

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பொது நலவாய நாடுகளின் டேர்பன் பிரகடணம் கோரி உள்ளது.

தென்னாபிரிக்காவின் டேர்பன் நகரில் நடை பெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாட்டு நிறைவில் வெளியிடப்பட்ட டேர்பன் பிரகடனத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரகடணத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி கவிழ்க்கப்பட்டு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதை இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. இராணுவ ஆட்சியாளர்களுக்கு சட்ட உரிமை வழங்கப்படக் கூடாது என உறுப்பு நாடுகளை மாநாடு கேட்டுக் கொள்கிறது.

பொதுநலவாய நாடுகளின் அமைச்சரவைக் குழுவில் இருந்து பாகிஸ்தானை வெளியேற்றுமாறு நடவடிக்கைக் குழு செய்த பரிந்துரையை மாநாட்டின் அனைத்துத் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

பாகிஸ்தானில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கான முன்னேற்றம் விரைவில் ஏற்படாவிட்டால் தொடர்ந்து பாகிஸ்தான்மீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்துப் பரிசீலிக்கத் தயாராக இருக்குமாறு மாநாடு உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொள்கிறது.

உலகத் தொழிலாளர் நலனும் சுற்றுச் சூழல் பாதுகாப்பும் வர்த்தகத்துடனும் கட்டுப்பாடற்ற வணிகத்துடனும் இணைக்கப்படக் கூடாது. உலகமயமாக்கல் சக்திகளை வறுமை ஒழிப்புக்காகவும் மக்களுக்கு அதிகாரம் வழங்கவும் எவ்வாறு நெறிப்படுத்துவது என்பதே இன்றைய சவாலாகும்.

இவ்வாறு அந்தப் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[ஐ-6-4]

## ஜனாதிபதி தேர்தலில் குச்மா வெற்றி

கீவ், நவ. 16

உக்ரேன் நாட்டின் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதியானே குச்மா வெற்றி பெறும் நிலையில் உள்ளார்.

90 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று குச்மா தன்னை எதிர்த்து போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை விட முன்னணியில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உக்ரைன் பின்னர் தனிநாடாகப் பிரிந்தது ரஷ்யாவின் பெரும் அணு ஆயுத பலத்தில் பெரும் பகுதி உக்ரைன் வசம் உள்ளது

[ஐ-6-4]

## நவாஸ் ஷெரீப் நேற்று ஆஜர் செய்யப்படவில்லை

இஸ்லாமாபாத், நவ. 16

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது சகாக்கள் ஆகியோர் மீதான வழக்கு விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின.

நவாஸ் ஷெரீப்பின் சகாக்களான நான்கு முக்கிய அதிகாரிகள் நேற்று பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். எனினும் நவாஸ் ஷெரீப் ஆஜர் செய்யப்படவில்லை.

விசாரணைகளுக்காக கொண்டுவரப்பட்ட நான்கு அதிகாரிகளும் தீவிர பாதுகாப்புக்களுடனேயே நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. கவச வாகனங்களும் இராணுவத்தினரும் பலத்த பாதுகாப்பு வழங்கி வர நான்கு பேரும் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டதாக கராச்சியில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆஜர் செய்யப்பட்ட நான்கு பேரும் தமது குற்றங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தனர் நால்வரையும் விளக்கமறியலில்வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இராணுவ ஆட்சியாளர் ஜெனரல முஷாரப் பயணம் செய்த விமானத்தைக் கடத்த முயன்றது —

அவரைக் கொலை செய்யச் சதி முயற்சியில் ஈடுபட்டது —

ஆகிய குற்றச் சாட்டுகள் நவாஸ் ஷெரீப மீதும் அவரது சகாக்கள் மீதும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றைய விசாரணைகளின் போது நவாஸ் ஷெரீப்பும் நீதிமன்றில் ஆஜர் செய்யப் படுவார் என்று பொலீஸார் முன்னர் தெரிவித்திருந்த போதும் அவர் நேற்று ஆஜர் செய்யப்படவில்லை.

நாளை புதன்கிழமை அவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப் படலாம் என்று இஸ்லாமாபாத்தில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-6)

## ஒரிஸா ஆளுநர் பதவி ஏற்பு

புதுடில்லி, நவ. 16

இந்தியாவின் ஒரிஸா மாநிலத்தின் புதிய ஆளுநராக தமிழகத்தைச் சேர்நத எம். எம். இராஜேந்திரன் நேற்று பதவி ஏற்றுக் கொண்டார்.

புவனேஸ்வரில் ஆளுநர் மாளிகையில் இடம் பெற்ற எளிமையான நிகழ்வு ஒன்றில் அந்த மாநில உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். கே. பத்திரா முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

ஐ-6)

உலக அரங்கில்

## ஆள்களில்லாத விண்கலம் சந்திரனுக்குஇந்தியா அனுப்பும்

புதுடில்லி, நவ. 16

சந்திரனுக்கு ஆள்களில்லாத விண்கலம் ஒன்றை அனுப்புவதற்கான முயற்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டு வருவதாக அதன் அதிகாரி ஒருவர் நேற்று புதுடில்லியில் தெரிவித்தார்.

இந்த விண்கலத்தை எப்போது அனுப்புவது என்பது குறித்து கால நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை. ஆனால் மிகக் குறைந்த செலவில் இந்தப் பயணத்தை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வுகளில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் சந்திர மண்டலத்தில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் போன்றல்லாமல் அறிவியல் ரீதியான ஆய்வுகளை மேற்கொள்வதற்காகவே இந்தியா இந்தப் பயணத்தை திட்டமிட்டுள்ளது.

இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

(ஐ-6)

## அமெரிக்கப் புலனாய்வாளர் பாகிஸ்தான் வருகை

இஸ்லாமாபாத், நவ. 16

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் தூதரகத்தில் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் ஐ நா. அலுவலகம் ஆகியவற்றின் மீது கடந்த வெள்ளியன்று றொக்கற் தாக்குதல்கள் நடத்தப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென அமெரிக்காவின் சமஷ்டிப் புலனாய்வுப் பிரிவின் மத்திய குழு அதிகாரிகள் இஸ்லாமாபாத் வந்துள்ளனர்.

வெள்ளியன்று நடைபெற்ற தாக்குதல்கள் பற்றிப் புலனாய்வு செய்வதற்காகவும்—

தாக்குதலின் பின்னணி என்ன என்பது குறித்து ஆராய்வதற்காகவும் —

இந்தக் குழு இஸ்லாமாபாத் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானின் பொலீஸ் உயர் அதிகாரிகள் மற்றும் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் அதிகாரிகள் ஆகியோருடனும் இந்தக் குழு கலந்துரையாடும் எனக் கூறப்பட்டது.

இந்த றொக்கற் தாக்குதல்கள் தொடர்பாக பாகிஸ்தான் பொலீஸார் 5 ஆப்கானிஸ்தான் அகதிகளைக் கைது செய்துள்ளனர்.

சவூதி அரேபிய கோடீஸ்வரர் ஒஸமா பின்லேடனை அமெரிக்கா விடம் ஒப்படைக்காததை அடுத்து ஆப்கானிஸ்தான் மீது பொருளாதாரத் தடைகளை ஐ. நா, விதிப்பதற்கு அமெரிக்காவே காரணம் எனக் கருதும் தலிபான் அமைப்பே இந்தத் தாக்குதல்களை நடத்தி இருக்கலாம் என்று அமெரிக்கா சந்தேகம் கொண்டுள்ளது.

(ஐ-6-4)

## கடைத் தொகுதிக்குள் கண்டபடி சூடு! 17 பொதுமக்கள் பலி!

### திரிபுராவில் பயங்கரம்

புதுடில்லி, நவ. 16

இந்தியாவின் திரிபுரா மாநிலத்தில் மேற்குப்புற மாவட்டம் ஒன்றின் கடைத் தொகுதிக்குள் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 17 பொது மக்கள் பலியாகினர்.

கடைத் தொகுதிக்குள் திடீரெனப் புகுந்த ஆயுதபாணிகள் மக்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் —

அனைத்து திரிபுரா புலிப் படையே இந்தக் கொலைகளுக்கு காரணம் எனவும் —

பொலீஸார்தெரிவித்தனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து 5 பேர் அந்த இடத்திலும் ஏனையோர் பின்னர் வைத்தியசாலையிலும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் 15 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

குற்றவாளிகளைத் தேடும் பணி பெரும எடுப்பில ஆரம்பிக்கப் ட்டுள்ளதாக மாநில அரசு அறிவித்துள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மேலும் அதிகளவில் துணை இராணுவப் படையினரை அனுப்புமாறு மத்திய அரசைக் கோரப் போவதாக முதலமைச்சர் தெரிவித்தார்.

(ஐ-6-4)

## பிரான்ஸில் வெள்ளம்; 19 பேர் இது வரை பலி!

பாரிஸ், நவ. 16

பிரான்ஸின் தென்பகுதியில் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக அங்கு பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக இது வரை 19 பேர்உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உயிரிழந்துள்ளோர் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

மீட்புப் பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவமும் மீட்புப் பணிகளில் உதவுவதற்காக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப் பப்பட்டுள்ளதாகவும் —

ஹெலிகளின் உதவியுடன் மீட்புப் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருதாகவும்—

பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

[ஐ-6-4]

### ஐ.நா.பொருளாதாரத்தடையையெதிர்த்து

## ஆயிரக்கணக்கானோர் திரண்டு காபூலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

காபூல். ந . 16

ஆப்கானிஸ்தான் மீது ஐ. நா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதை எதிர்த்து தலைநகர் காபூலில ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

காபூலில் உள்ள முன்னாள் அமெரிக்கத் தூதரகம் மீதும் ஐ. நா அலுவலகம் மீதும் கற்களை வீசித் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. அங்கு காவலில் இருந்த தலிபான் படையினர் வானை நோக்கிச்சுட்டு ஆர்ப்பாட்டக் காரர்களைக் கலைந்து போக வைத்தனர் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். அமெரிக்காவுக்கும் ஐ. நாவுக்கும் எதிரான கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் காபூல் நகரின் மத்திய வீதிகள் வழியாக ஊர்வலமாகச் சென்றனர்.

ஐ நாவின் தடை நடவடிக்கையால் கோபமடைந்த மக்கள் கிளர்ந்தெழுந்து மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகள் என்பவற்றுக்கு தலிபான் பொறுப்பேற்க முடியாது என காபூலில் தலிபான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

[ஐ-6-4]

## துருக்கி பூகம்ப சேதங்கள்; கிளின்ரன் பார்வையிட்டார்

அங்காரா, நவ. 16

துருக்கியில் அண்மையில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் நேற்று நேரில் பார்வையிட்டார்.

மத்தியதரைக் கடல் நாடுகளுக்கான 10 நாள் விஜயம் ஒன்றை மேற் கொண்டு துருக்கித் தலைநகர் அங்காராவுக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்த கிளின்ரன் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேற்று பார்வையிட்டார்.

துருக்கியில் 5 நாள்கள்தங்கி இருக்கும் கிளின்ரன் அங்கு இஸ்தான்புல்லில் நடைபெறும் ஐரோப்பிய பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைப்பின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வார்.

பின்னர், கிரேக்கம், இத்தாலி, பல்கேரியா, மசிடோனியா, கொசோவோ ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார். எதிர்வரும் 23ஆம்திகதி அவர் நாடு திரும்புவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் பழைய வீடியோ பிரதிகள் 700 ம் புதிய பிரதிகள் 50 ம் மிகவும் மலிவான விலையில் விற்பனைக்குண்டு தொடர்பு: இல. 43, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(70977)

றோணியோ மெசின் விற்பனைக்குண்டு. [சிறிது திருத்தப்பட வேண்டும்] தொடர்பு: 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[70975]

### நாய்க்குட்டி விற்பனை

30நாள் நிரம்பிய அல்சேசன் கறுப்பு நிற நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: ம. மார்க்கண்டு, M S. ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். 17-11-99 புதன்கிழமை பார்வையிடலாம்.

[70915]

### தவறிவிட்டது

பெண்களுக்குரித்தான கைக்கடிகாரம் (Citizen) ஒன்று கோண்டாவில் ஸ்ரேசனுக்கும் உப்புமடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எஸ். விஜயகுமார், அருண் புளொக் பகுதி (உதயன்) என்னும் முகவரியில் தயவு செய்து ஒப்படைத்து உதவவும்.

(70993)

### மரக்கன்றுகள் விற்பனைக்கு

மூன்று மாதத்தில் காய்த்துப் பயன்தரக் கூடிய (இந்திய இனம்) முருங்கைக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. ஒரு கன்று 15 ரூபா. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம் (செல்வநாக பூசணி அம்மன் கோயில் அருகில்)

(70994)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## நேர்முகப் பரீட்சை

1. விலங்கியல் / தாவரவியல் / இரசாயனவியல் / பௌதிகவியல் ஆகிய துறைகளுக்கான தற்காலிக உதவி விரிவுரையாளர் / செய்முறைக் காட்டுனர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை 1999 — 11 — 18 அன்றும்,
2. கணிதமும் புள்ளிவிவரவியலும் / கணனி விஞ்ஞானம் / கணனிப்பிரிவு ஆகிய துறைகளுக்கான தற்காலிக உதவி விரிவுரையாளர் / போதனாசிரியர்பதவிக்களுக்கான நேர்முகப் பரீட்சை 1999—11—19 அன்றும் பல்கலைக்கழக இராமநாதன் மண்டப அறையில் நடைபெறும்.

மேற்குறிபிட்ட பதவிகளுக்கு விண்ணப்பித்த தகுதியுடைய விண்ணப்பதாரிகளுக்கு ஏற்கனவே தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதனை அறியத் தருகின்றோம்.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்
1999—11—15

(சி/9841)

### O/L 99 வகுப்புக்கள்

இறுதிநேர வகுப்புக்கள் ஆங்கிலம் கணிதத்தில் 30 மணித்தியாலங்கள் கொண்ட 15 நாள்கள் Paper Class Distinction, Credit பெறுபேறடையக் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள B.Sc (cey) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின் வீதி, திருநெல்வேலி.

(70979)

### O/L MATHS – 99

34 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் காலை, மாலை இரண்டிரண்டு மணித்தியாலயத்தின்படி ஆரம்ப அறிவிலிருந்து 10 அல்லது 15 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி, கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.

(70991)

## வாழ்த்து

நேர்முகவர்ணனையில் தனி முத்திரை பதித்து
மதுரகவியால் 'மண்' சஞ்சிகை
மூலம் மகத்தான அகில உலக முதற் பரிசை ஜேர்மனியில்
பெற்று எந்நாளும் தமிழ் அணங்கை கரம் பற்றும்

**மதுரகவி எம். பி. அருளானந்தன்**

மேலும் சிறப்புற்றோங்க நல்வாழ்த்துக்கள்.

வேலணை பாலா
வலிகாமம் கல்விவலயம்,

(70990)

## துறவு வாழ்வின் வெள்ளிவிழா வாழ்த்துக்கள்

✠✠✠✠✠✠✠✠✠✠✠

அருட்செல்வி
**ஜி செல்வராணி** அவர்கள் ஏ சி
( அதிபர், யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் )

அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபையின்
வாழ்வில் அர்ப்பணித்த
25 ஆவது ஆண்டு நிறைவை
மகிழ்வுடன் கொண்டாடும்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர்
அருட்செல்வி ஜி. செல்வராணியை

இறையருள் நிறையப் பெற்று
வாழவும், பணியும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

திருமதி சொ. வ. வி. ஜோர்ஜ்,
செல்வி பிலோமின் பிரசாந்தி [மகள்]
ஓய்வு பெற்ற அதிபர் சி. தார்சீசியஸ் தம்பதிகள்.

49, பால உடையார் வீதி,
யாழ்ப்பாணம்.

(71001)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 18 |
| — | — |
| 02 | 10 |
| — | — |
| 1924 | 1999 |

### அமரர் இளையதம்பி பரமசாமி

(முன்னாள் நடத்துநர், இ. போ. ச.)

எம்மை எல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி எய்திய அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், சுகவீனமுற்றிருந்த வேளை உதவிய சாவகச்சேரி, யாழ் போதனா வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

நாளை (17 - 11 - 99) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்துகொண்டு, மதிய போசனத்திலும் [பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(சி/9840)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகள் வாடகைக்குத் தேவை

கொழும்பில் தலைமையகத்தைக்கொண்ட வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு யாழ். நகரில் ஒரு மைல் சுற்றாடலுக்குள் வீடுகள் தளபாடங்களுடன் அல்லது வெற்று வீடுகளாகத் தேவைப்படுகிறது. வீட்டு அமைவிடம், வாடகை, ஆகிய விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விள. இல. 971,
மே/ பா உதயன்.

(70997)

## கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினர்
**லயன் க. குகப்பிரசாதம்**
அவர்களின் தாயார்

**திருமதி கந்தப்பிள்ளை முத்துப்பிள்ளை**

அவர்கள் 14 - 11 - 99 இல் காலமானார். இந்த நிகழ்வையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன்ஸ் கழக உறுப்பினர்
கோப்பாய்.

(சி/9845)

## நீங்காத நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 | 16 |
| — | — |
| 10 | 11 |
| — | — |
| 1972 | 1998 |

### செல்வி ரெரன்சியா பீரிஸ்

(காந்திமதி)

(டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.)

கருணை முகமும் காந்த விழியும் நிறைந்த உள்ளமும் சாந்த மனதும் ஒருங்கே அமைந்து நின்ற உனது தாதியர் சேவை தொடர முடியாமல் எம்மிடம் இருந்து பிரிந்து போன அன்பான சகோதரிக்கு எம் ஆறாத் துயரமதை கூறுகின்றோம். ஒரு வருடமாகினாலும் உன் உருவம் எம்மைவிட்டு என்றுமே நீங்காதம்மா! எமது நினைவு மாறாதம்மா!

இறைவனுடன் இணைந்து கொண்ட எம் அருமைச் சோதரிக்குக் கண்ணீரின் அஞ்சலியைக் கூறுகின்றோம்.

திருச்சிலுவைக் கன்னியர்கள்,
தாதிமார், சக ஊழியர்கள்,

கடற்கரை வீதி,
பாஷையூர்.

(70999)

## மரண அறிவித்தல்

### தங்கவேல் இலட்சுமிப்பிள்ளை

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் தங்கவேலின் மனைவி இலட்சுமிப்பிள்ளை 14-11-99 இல் காலமானார்.

அன்னார் காரைநகர் வலந்தலை முருதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரவேல் சங்கரப்பிள்ளையின் அன்பு மகளும், சுந்தரலிங்கம் [தங்கவேல் பார்மசி], தியாகலிங்கம், ஜெகசோதி, கெங்காதரன் மற்றும் காலஞ்சென்ற சத்தியதேவன் [நீர்ப்பாசனத் திணைக்களம் (T A)] ஆகியோரின் தாயாரும் திலகவதி, தவமணி, Dr. சிவசுப்பிரமணியம் [E N.T. Surgeon] தனலட்சுமி, சர்வலட்சுமி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சிதம்பரம் மற்றும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, ஆறுமுகம்பிள்ளை மற்றும் இரத்தினம் ஆகியோரின் சகோதரியும், அருள்நந்தி (ஜேர்மனி), கணநாதன், கலாசோதி, சரோஜாதேவி, சிவகுமார், பாலகுமார், பவானி, சிவபாலன், நர்மதா, ஜெயசக்தி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாழ்ப்பாணம் பிறவுண் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மயானத்துக்கு 14-11-99 எடுத்துச் செல்லப்பட்டது என்பதனை அனைவருக்கும் அறியத் தருவதுடன் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பிள்ளைகள்

114/2 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(70998)

# மைதானம் இல்லை என்பதற்காக விளையாட்டை புறக்கணிக்கக்கூடாது

## உதைபந்தாட்டப் போட்டி பரிசளிப்பில் கல்விப் பணிப்பாளர்

வலி வடக்கு, நவ. 16

பாடசாலைக்கு மைதானம் இல்லை என்பதற்காக விளையாட்டு நிகழ்வுகளில் இருந்து மாணவர்கள் ஒதுங்கக் கூடாது.

மேற்கண்டவாறு வலிகாமம் கல்விவலய கல்விப் பணிப்பாளர் வீ இராசையா குறிப்பிட்டார்.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பரிசளிப்பு வைபவம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா மேலும் தெரிவித்ததாவது;-

மாணவர்களுக்கு கிடைக்க வேண்டியவற்றை கிடைக்கச் செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளாத ஏனைய பாடசாலைகளுக்கும் எதிர்காலத்தில் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

'ஏ' 'பீ', 'சீ' தரத்தில் உள்ள 60 பாடசாலைகள் எமது பகுதியில் இயங்குகின்றன. 27 பாடசாலைகள் மட்டுமே இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டுள்ளன. ஏனைய பாடசாலைகள் பங்குபற்றவில்லை. மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தவும், வெளிக்கொண்டு வரவும் ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும் இதேபோன்று எம் மத்தியில் ஆற்றல் மிக்க பல ஆசிரியர்களும் இனம் காணப்படாமல் மறைந்து கிடக்கின்றனர்

இத்தகைய நிலையை ஒவ்வொரு பாடசாலையும் இனம் கண்டு வெளிக்கொண்டு வர வேண்டும். மைதானம் இல்லையென்று கூறி விளையாட்டு நிகழ்வுகளில் இருந்து விலகிக் கொள்ளக் கூடாது.

வலிகாமம் கல்வி வலயத்தைப் பொறுத்த வரையில் 400 மீற்றர் மைதானம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தவிர்ந்த வேறு எங்கும் எமது பிரிவில் இல்லை. இப் பகுதியில் சிறந்ததொரு மைதானத்தை உருவாக்க வேண்டுமென்பதில் கல்வி உயர்பீடமும் அக்கறை கொண்டுள்ளது — என்று தெரிவித்தார்.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதன் தனது தலைமை உரையில் கூறியதாவது:-

மாணவர்கள் வெற்றியைக் கண்டு களிப்படையவும், தோல்வியைக் கண்டுதுவண்டு விடவும் கூடாது. வெற்றி தோல்வியை சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை அடைய வேண்டும். அதுவே வாழ்க்கையிலும் எமக்கு சிறந்த வெற்றியை ஈட்டித் தரக்கூடியது எனக் குறிப்பிட்டார்.

உதவிக் கல்விப் பணிப்பாளர் வீ. பாலசிங்கம் நன்றியுரை கூறினார். (ஐ-86)

# 40 பயனாளிகளுக்கு சுய தொழில் கடன்

வலிகாமம் தெற்கு, நவ. 16

கந்தரோடை விவசாய சம்மேளனத்தைச் சேர்ந்த 40 பயனாளிகளுக்கு சுயதொழில் சுழற்சி முறைக் கடனாக நான்கு லட்சம்ரூபா பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு, கோழிப்பண்ணை ஆரம்பித்தல், சிறுவர்த்தக முயற்சிகள், விவசாயம் போன்ற சுயமுயற்சிகளில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு பயனாளிக்கும் தலா பத்தாயிரம் ரூபா சுழற்சி முறைக் கடனாக வழங்கப்பட்டது.

இரண்டுமாதத்தின்பின்இப் பயனாளிகள் கட்டம் கட்டமாக 20 தவணைகளில் இக் கடனை மீளச் செலுத்த வேண்டும்.

இவர்கள் மீளச் செலுத்தும் கடன் பணத்தைக் கொண்டு மேலும் பயனாளிகளுக்கு கடன் வழங்கப்படும்.

கந்தரோடை விவசாய சம்மேளன உறுப்பினர்களுக்கு கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் வைத்து வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன் ஆகியோர் இக் கடன்களை வழங்கினர். [ஐ-152]

## ஜி. சீ. ஈ. சாதாரணதரம்:

# செய்முறைப் பரீட்சைகள் இம்மாத இறுதியில்

வலிகாமம் தெற்கு, நவ. 16

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள கல்வி பொதுத்தராதர பத்திர சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் சில பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகள் நவம்பர் மாத பிற்பகுதியில் நடைபெற உள்ளன.

இச் செய்முறை பரீட்சையினை பரீட்சார்த்திகள் தாம் கல்வி பயின்ற பாடசாலைகளிலேயே எடுக்க முடியும்.

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளில் இச் செய்முறை பரீட்சைகளை நவம்பர் மாதம் 23 ஆம் திகதியில் இருந்து 26 ஆம் திகதிக்குள் நடத்தி முடிக்குமாறு வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பாடசாலை அதிபர்களை அழைத்து ஆலோசனை வழங்கியுள்ளார்.

பரீட்சையை நடத்துவதற்குரிய வழிகாட்டியான கைந்நூல்ஒன்றும் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டது.

சித்திரம், சங்கீதம், நடனம், விவசாயம், மனையியல் ஏனைய கைத்தொழிலும் தொழில் நுட்பத்துறையும் சார்ந்த பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகளே நடைபெற உள்ளன.

(ஐ-152)

# யாழ். பல்கலை பேரவைக்கு புதிதாக நால்வர் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். பல்கலைக் கழக பேரவைக்கு நான்கு புதிய உறுப்பினர்கள் பல்கலைக் கழகங்களின் மானிய ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி கனகரட்ணம் கேசவன், சட்டத்தரணி எஸ். ருத்ரா, இளைப்பாறிய கல்வியியல் துறை முன்னாள் தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம், கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் என். தேவராஜா ஆகியோரே புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தில் ஏற்படுத்தப்பட்டபுதியபீடங்கள்வகையாலும் பேரவையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் இந்தப் புதிய நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது, (இ-3-6)

# தையல் இயந்திரம்

யாழ். மாவட்டத்திலுள்ள விதவைகளுக்கு இலவசமாக தையல் இயந்திரம் வழங்கப் படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து வைத்திலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

தையல்வேலைதெரிந்தமுன்னர் சமூகசேவை அமைச்சினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ளாத — பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறும் விதவைகளுக்கே தையல் இயந்திரம் வழங்கப் படவுள்ளது. (ஐ-6-175)

# வகுப்பறைக் கட்டடம்

வலி.தெற்கு, நவ. 16

ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டடம் ஒன்று ஐந்து லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுவருகின்றது ஐ-133152]

# இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ. 16

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த தெய்வேந்திரன் தயாளன் (வயது17) என்ற இளைஞன் கடந்த 13 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (இ-3-5-6]

# ஆரம்ப சுகாதார நிலையம்

வலிகாமம் தெற்கு, நவ 16

ஐந்து லட்சம் ரூபாசெலவில் உடுவிலில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஆரம்பிக்கப் பட உள்ளது.

உடுவிலில் உள்ள ஆலடி கிராமத்தில் தோரணைக் கடவை பகுதியில் இந் நிலையம் நிறுவப்படும்.

அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் உதவியுடன் வலிகாமம் தெற்கு பிரதேச திட்டமிடல்பிரிவினரால்மேற்படி நிலையம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன

இச் சுகாதார நிலையத்தை [illegible] (ஐ-152)

# சகாய நிதி கொடுப்பனவு

சுழிபுரம், நவ. 16

தொல்புரம், மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தினரால் இம்முறை இருபதுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுக்கு சீவிய சகாயநிதி வழங்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டைவிட இந்த முறை அதிகமானோர் பணம் பெற்றுள்ளதாகவும் —

இந்த முறை கொடுப்பனவுகள் வயது மூப்பின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டதாகவும் —

தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் பவள விழாவைக் கொண்டாடவுள்ள இந்தச் சங்கத்தில் சுமார் ஆயிரத்து 500 பேர் உறுப்பினராக இருக்கின்றனர். [ஐ-8-28]

## வாசகர் திருமுகம்

# போக்குவரத்து விதிகளைப் போதிக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது வசிக்கும் இளைஞர்களும் யுவதிகளும், போக்குவரத்து விதி என்ற ஒன்று இருப்பதையே தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். வீதிகளில் சைக்கிள்கள் மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றில் சமாந்தரமாகச் செல்கிறார்கள். வீதிகளின் இரு ஓரங்களாலும் ஒரே திசையில் வாகனங்களைச் செலுத்துகிறார்கள். சந்திகளை முறை தவறிக் கடக்கிறார்கள்; இதனால் விபத்துகள் பெருகுகின்றன. வார்ட்டுகளில் நோயாளர் நிறைகின்றனர். போக்குவரத்தைக் கண்காணிக்க வேண்டியவர்கள் அதனைக் கண்காணிக்கவோ, கட்டுப்படுத்தவோ முன்வருவதாகத் தெரியவில்லை

கிராமங்கள் தோறும், நடமாடும் வைத்திய சேவை வழங்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள அரிமா சங்கங்கள் கிராமங்கள் தோறும் போக்குவரத்து விதிகளை மக்களுக்கு விளக்கும் வகுப்புக்களை நடத்தி அல்லது ஒளி நாடாக்களைப் பயன்படுத்தி மக்களுக்குப் போக்குவரத்து விதிகள் பற்றிய அறிவை ஊட்ட வேண்டும். வீதி விபத்துக்களைக் குறைக்க உதவ வேண்டும்.

ச. ஆ. கோபாலமூர்த்தி

திருநெல்வேலி.

# சம்பளத்தில் அனுமதி இன்றி வெட்டு

பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி ஆசிரிய மாணவர்களின் சம்பளம் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படும் சம்பள விவரப்பட்டியலிலும் பார்க்க அடிக்கடி குறைவாகவே வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட ஆசிரியர்களின் சம்மதம் எதுவும் பெற்றுக்கொள்ளாமல் தன்னிச்சையாக அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரச ஊழியரின் சம்பளத்தொகை அவருக்கு வழங்கப்பட்ட பின்னர் அவரின் அனுமதியுடன் தமக்கு வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது தான் நடைமுறை. எமது கலாசாலையைப் பொறுத்தவரை தன்னிச்சையான நிர்வாகத்தின் செயற்பாடுகளால் விழாக்கள் என்ற பேரில் பணம் அறவிடப்படுகின்றது.

மாதாந்தம் குறைவான ஊதியம் பெறும் எமக்கு இச்செயற்பாடு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. உணவு, உடை, உறையுள் போன்ற அத்தியாவசிய தேவைகளையே நிவர்த்திசெய்ய இத்தொகை போதுமானதாக இல்லை வெளிமாவட்ட மாணவர்களின் நிலையோ மிகவும் பரிதாபமாக உள்ளது பல அல்லல்களுக்கு மத்தியில் உறவுகளைப் பிரிந்த ஆசிரியர் பயிற்சியை மேற்கொள்ளும் வேளை சாப்பாட்டுக்குக் கை ஏந்தும் நிலை இதனால் ஏற்படுகிறது. மேலும் மனவேதனைக்குரிய விடயம் என்னவெனில் எங்களிடம் இருந்து அறவிடப்பட்ட பணத்திற்கு எந்தவிதமான கணக்குகளும் இன்றுவரை காட்டப்படவில்லை என்பதாகும். இந்த விடயம் தொடர்பாக கல்வி உலகம் சிந்திக்குமா?

திருநெல்வேலி. பாதிக்கப்பட்டவர்கள்

# சுகாதாரமற்ற முறைகளில் கையாளப்படும் பாண்

கடைகளில் சுகாதார விதிகளுக்கு அமைவாக கண்ணாடிப் பெட்டிகளில் வைத்தே பாண் விற்பனை செய்யப்பட வேண்டும் என சுகாதாரப் பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என அறிகிறோம்,

பேக்கரியில் இருந்து வெளி வரும் பாண் எந்தெந்தச் சந்தர்ப்பங்களில்—எத்தனை முறை— கையினால் தீண்டப்படுகிறதுஎன்பதுவும் எவ்வாறான வியாபார நிலையங்களில்விற்பனை செய்யப்படுகின்றது என்பதும் கவனிக்கப்படவேண்டிய முக்கிய அம்சங்கள்.

தயாரிக்கும் இடத்தில் இருந்து பெட்டியில்வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் இடத்திற்கு கொண்டு வரப்பட்டால் மட்டுமே. பாண் ஓரளவுக்கு சுகாதாரமாகக் கையாளப்பட்டதாகக் கொள்ளலாம்.

பலசரக்குக் கடைகளில் விற்கப்படும் பாண் சுகாதாரத்துக்கு ஒவ்வாத முறையில் கையாளப்படுவதை அவதானிக்கலாம். இது சர்வசாதாரணமானது.

மண்எண்ணெய் தொடக்கம் ஊத்தைச் சோடா வரைவிற்பனை செய்பவர்பாணையும்விற்பனைசெய்யும் போது சுகாதாரத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்?

இதற்கு பொருத்தமான தீர்வைக் கண்டு பிடிக்க வேண்டிய பொறுப்பு சுகாதார அதிகாரிகளைச் சார்ந்ததாகும்.

பலசரக்குச்கடைகளில்பாணை விற்பனைசெய்வதை அனுமதிப்பதாயின் ஒவ்வொரு பாணையும் பொலித்தீன் பைகளில் அடைத்து விற்க வேண்டியது அவசியமாகும். உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

வை. சந்திரபாலன்

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தரம் - 6 அனுமதி - 2000
## யா/ இராமநாதன் கல்லூரி

எமது கல்லூரியில் தரம் 6 – க்கான அனுமதிகள் கோரப்படுகின்றன. கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பத்தைப் பெற்று 30—11—99 - ற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

விடுதிச்சாலையில் சேர விரும்புவோர் மேற்குறிப்பிட்ட திகதிக்குள் விண்ணப்பிக்கவும்.

– அதிபர்

(சி/9839)


## வாழ்த்துகின்றோம்



### அருட் செல்வி கே. செல்வராணி A. C

( அதிபர், யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்)

பிறந்த நாளான இன்று துறவறத்தில்

வெள்ளி விழாக்

காணும் எம் இனிய அதிபரை மகிழ்வுடன் பாராட்டி பல்லாண்டு காலம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து கல்விப் பணியைத் தொடர மனமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர், மாணவர், பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர்,
**யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.**

றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
16 11–1999

[சி/9835]

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் ஒருவராய்
16
|
10
|
1972



விண்ணில் ஒருவராய்
16
|
11
|
1998

### ரெரன்சியா காந்திமதி பீரிஸ்

(தாதி, திருச்சிலுவை வைத்தியநிலையம், முன்னாள் தாதி, சென்றல் நேர்சிங்கோம்)

அன்பெனும் பாசத்தைப் பொழிந்து
குடும்பத்தின் ஒளியாய் துலங்கிய
மகளே!
என் மடியில் பூத்த ஏழு மலரில்
நடு மலராய் உதித்தாய் நீ
புன்சிரிப்பு மலர்ந்திடும் மதிமுகம்
காணா வெந்திடும் எம் நெஞ்சம்
எம் நிம்மதி இழக்க இவ்இளம் வயதினில்
பிரித்தாரோ உம்மை.
மண்ணில் பணிபுரிந்த உம்மை
விண்ணில் பணிசெய்ய அழைத்தாரோ
இறைவன்.
ஓராண்டு சென்றாலும் எம்நெஞ்சினை
விட்டகலாது உம் உருவம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்புத்தாய், சகோதர சகோதரிகள்,
அத்தான்மார், பெறாமக்கள்.

15/1A, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

[70968]

#### இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மக்களிடமிருந்து

# தெளிவான ஆணையைப் பெறவே

# முன்கூட்டியே தேர்தல் நடக்கிறது

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 16

'இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண மக்களிடம் தெளிவான ஆணையைப் பெறுவதற்காகவே ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டி நடத்துகிறோம்'

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரியில் பொதுமக்களின் கேள்விகளுக்கு செய்மதி மூலம் அளித்த பதிலிலே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் சக்தியில்லாத ஜனாதிபதியாக நான் இருக்கவில்லை தற்போதைய அரசாங்கம் தீர்த்து வைக்காத ஒரே ஒரு பிரச்சினை இனப்பிரச்சினை தான்.

தற்போதைய அரசமைப்பின் பிரகாரம் அதற்குத்தீர்வு காண முடியாது. அரசமைப்பை மாற்றி தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண மக்களின் தெளிவான ஆணையைப் பெறவே தேர்தலை நடத்துகிறோம் — என்றார்.

(இ–க–3)

### ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

வலிகாமம் மேற்கு, நவ. 16

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கியமாக வீதிகளின் புனரமைப்புக்கான வேலைத் திட்டம் தொடர்பாக ஆராயப்படும்.

(ஐ-6-175)

### கண் சிகிச்சை

வலிகாமம் தெற்கு, நவ. 16

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரின் ஆதரவில் சுன்னாகம், உடுவில் பிரதேச சபைக்குட்பட்ட மக்களின் நன்மை கருதி இலவச கண் பரிசோதனை இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெற உள்ளது.

மருதனார் மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய பீடத்தில் மேற்படி இலவச கண் சிகிச்சை இடம்பெறும்.

[ஐ-152]

### புதிய தேர் அமைப்பு

காரைநகர், நவ. 16

காரைநகர் சிவன் கோவிலில் வடபகுதி மீள்குடியமர்வு புனர்வாழ்வு அதிகாரசபையின் நிதியுதவியுடன் பல லட்சம் ரூபா செலவில் நடராஜப் பெருமானுக்குப் புதிய தேர் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

தேருக்குத் தேவையான வாகைமாலை உட்படப் பல பொருள்கள் மதுரையில் இருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும்டிசெம்பர் திருவாதிரை உற்சவத்திற்கு இப்புதிய தேரிலேயே நடராஜப்பெருமான் வீதியுலா வரவுள்ளார்.

[ஐ–73]

### இளைஞர் கழகங்கள் அமைப்பு

வேலணை, நவ. 16

தீவுப்பகுதி தெற்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இளைஞர்களின் திறனை மேம்படுத்தும் முகமாக ஏழு இளைஞர் கழகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இளஞ்சுடர், சமூகவளி, செந்தமிழ், கலைமுரசு, இளந்தளிர், அறவொளி, தமிழோசை ஆகிய இளைஞர் கழகங்களே அமைக்கப்பட்டுள்ளன என்றும் இக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பன மிக விரைவில் வழங்க உள்ளதாகவும் இளைஞர் சேவை அலுவலர் தெரிவித்தார்.

(ஐ–167)


## கணிப்பொறி - COMPUTER

பல ஆயிரக் கணக்கில் செலவு செய்து
பல மாதங்கள் COMPUTER
கற்பதற்கென்றே அலையாமல்

### ரூபா 200 உடன்

தகவல் – அடிப்படை – கட்டமைப்பு – சாளரங்கள் பற்றிய பூரண விவரங்கள், குறிப்புகள். செயன்முறைகள் அனைத்தையும் எந்த ஒரு வழிகாட்டியுமின்றி பால், வயது பேதமின்றி சுயமாகவே இலகு தமிழில் கற்றுக் கொள்ளலாம்.

**ஆச்சரியமாக உள்ளதா?**

இன்றே படியுங்கள் உண்மை புரியும்.

கலையார்வன் கு. இராயப்புவின்

### செயல்முறை கணிப்பொறி

**வெளியீடு/விற்பனை:**

### NEO CULTURAL COUNCIL

28/1, ST. JAMES WEST STREET, JAFFNA.

TELE PHONE: 3224

(சி/9836)


## 31 ஆம் நாள் நீங்கா நினைவலைகள்

மலர்வு:
26
—
08
—
1946



உதிர்வு:
17
—
10
—
1999

அமரர்

### பசுபதி தங்கமயில் (இராசு)

(சிற்பக்கலைஞர்)

திதி: 16 – 11 – 1999

எம் பாசமிகு தந்தையே!
எம்மை பாரினில் தவிக்கவிட்டு சென்றதேனோ?
சிற்பக்கலையை சிந்தையில் கொண்டு
சிறப்புடன் பார் போற்ற வாழ்ந்தோனே
இன்று நீர் செய்த கைவண்ணங்கள் எல்லாம்
உம்மை நினைவூட்டிக் கொண்டிருக்க
நீர் மறைந்து இன்று ஒரு மாதம் உருண்டோடி விட்டது
ஒரு மாதம் என்ன பல ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவு எம்மை விட்டு நீங்காது!
உம் மக்கள் மகிழ்வுடன் வாழ உவகை
கொண்டீர் அப்பா.

நின் நினைவுகளை நெஞ்சினில் சுமந்து கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

இன்று (16 – 11 – 1999) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

''மயவர் இல்லம்'',
புலவர் வளவு,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி

(70941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொறுப்பு இரு தரப்புகளிடமும்

தனியார்துறைகளில் பணிபுரிவோர் தமது இளைப்பாற்றுக் காலத்தில் நம்பியிருப்பது ஊழியர் சேமலாப நிதியையே.

அந்த நிதி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டால் அவர்களின் ஓய்வு கால வாழ்க்கையில் பல கஷ்டங்களும் சிரமங்களும் தோன்றும். சேமலாப நிதிப் பணம் தாமதம் இன்றி வழங்கப்பட வேண்டுமானால் அது முழுவதுமாக உரிய முறையில் அரசினால் பேணப்பட வேண்டும்.

சேமலாப நிதிக்குரிய பணம் போர்ச் செலவினத்துக்குப் பயன்படுத்தப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் குற்றஞ் சாட்டியிருந்தார்.

அதனால் தனியார் ஊழியர்கள் மத்தியில் தமது பணத்துக்கு என்னாகுமோ என்ற அச்சம் எழுந்திருந்தது. அவசரத்துக்காக அல்லது அபிவிருத்திக்காக மாற்றப்படும் பணம் எப்படியும் மீளவந்து சேரும். ஆனால் போர்ச் செலவுகளுக்குப் பயன்படுத்தப்படும் பணத்தின் நிலை என்னாகுமோ என்று அவர்கள் அச்சமுறுவதில் நியாயம் உண்டு.

அரசாங்கத்தின் வருடாந்தச் செலவினத்தில் 30 சதவீதத்துக்கும் மேற்பட்ட தொகை போருக்காக விரயமாகிறது. அந்தப் பணம் எந்த வகையிலும் மீளவந்து சேர்வதற்கு வாய்ப்பில்லை. ஊழியர் சேமலாப நிதியும் அதற்குள் சேருமாயின் தனியார் ஊழியர்கள் பெரும் கஷ்டங்களையும் சிரமங்களையும் அனுபவிக்க நேரிடும்.

அரசாங்கத்தை நம்பி வைப்பிலிட்ட பணத்தைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய நேரத்தில் மீளளிக்க வேண்டியது அதன் பொறுப்பு. அதனைத் தாமதமாக வழங்குவதாயினும் கூட, அது நம்பிக்கைத் துரோகமே. அரசாங்கம் அந்தப் பணத்தை— 16,500 கோடி ரூபாவை — போர்ச் செலவுக்குப் பயன்படுத்தியிருக்குமானால் அது பாரதூரமான குற்றம் ஆகும்.

ஆனால் ஊழியர் சேமலாப நிதி போர்ச்செலவுக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று தொழிலமைச்சர் டி ஜே. செனிவிரத்ன அறிவித்திருக்கிறார். எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுப் பொய் எனவும் கூறியுள்ளார். ஊ. சே. நிதி அங்கத்தவர்களை — லட்சக் கணக்கான தனியார் ஊழியர்களை — அரசாங்கத்தின் மீது வெறுப்புக் கொள்ளச் செய்வதற்காகவே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு சொல்வதாகவும் தொழில் அமைச்சர் கண்டித்துள்ளார்.

நெருப்பில்லாமல் புகையாது. ஆகையால் சேமலாப நிதிக்கு ஏதோ ஒரு வகையில் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்று தனியார் ஊழியர்கள் அஞ்சுவதில் தவறில்லை. அரசியல் தலைவர்கள் தமது இலாபம் கருதி இந்த விடயத்தில் 'விளையாட' நினைக்கலாகாது.

எதிர்க்கட்சித் தலைவர் இது குறித்து உண்மை நிலையை உடனடியாக வெளியிட வேண்டும். அடுத்த தரப்புக்கு— ஆளுங் கட்சிக்கு — பாதிப்பு உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இல்லாததைச் சொல்லியிருந்தாலும் அதனை ஒப்புக் கொண்டாக வேண்டும்.

அதேபோன்று, அரசு தான் சொல்வது உண்மை என்பதனை நிரூபிக்க வேண்டும். வெறும் அறிக்கையை வெளியிடுவதால் மட்டும் நிலைமையைப் பூசிமெழுக முனையக் கூடாது.

இது மிகவும் பாரதூரமான விடயம். இரு தரப்புகளும் தமக்குள்ள பொறுப்புகளை உணர்ந்து உண்மையை வெளிப்படுத்த வேண்டும். இல்லையேல் பாதிப்பு இரு தரப்புகளுக்குமே.

# மருத்துவ பீடத்துக்கு ஒளி கொடுக்க நலன்புரிச் சங்கம் அமைப்பு

யாழ். பல்கலைக்கழகம் தனது வெள்ளி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடிய போதும் இப்பல்கலைக்கழகத்தில் ஏனைய பீடங்கள் வளர்ந்த அளவுக்கு மருத்துவ பீடம் வளர்ச்சியடையாதது பெரும் கவலைக்குரியதாகும்.

புகழ்பூத்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடம் மிகவும் செயற்திறன் மிக்கதாக விளங்க வேண்டிய நேரத்தில் செயலிழந்துபோய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

உலகெல்லாம் பரந்து வாழும் தமிழர்கள் மத்தியில் எத்தனையோ அதி திறமை வாய்ந்த வைத்திய நிபுணர்கள், பேராசிரியர்கள், சத்திரசிகிச்சை நிபுணர்கள் இருந்தபோதும் யாழ். மருத்துவபீடம் குறைந்தளவு விரிவுரையாளர்களுடன் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இக்குறைபாட்டை நீக்கி மருத்துவபீடத்தைச் சர்வதச தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் பல்கலைக்கழக நலன் விரும்பிகளும் மற்றும் மருத்துவபீடமாணவர்களின் பெற்றோர்களும் அண்மையில் மருத்துவபீடத்தில் கூடி 'யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட நலன்புரிச் சங்க' என்ற அமைப்பொன்றினைம் அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

ஓய்வுபெற்ற நீதிபதி மு. திருநாவுக்கரசுவைத் தலைவராகக் கொண்ட 15 பேரடங்கிய செயற்குழு ஒன்றும் இந்த

**செய்தி மடல்**

அமைப்புக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவர் மு. திருநாவுக்கரசு இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் கூறியதாவது;

எமது பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான உதவிகளை வழங்கிப் பிறநாடுகளிலிருந்து வைத்திய விற்பன்னர்களை வரவழைத்து நொந்து போயிருக்கும் மக்களுடைய நோக்காட்டைப் போக்க வேண்டியது எமது தலைாயபணியாகும்.

இந்தப் பணி இம் மண்ணில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உரியது.

சிறந்ததொரு வைத்திய பீடத்தைக் கட்டியெழுப்புவதற்கு வெளிநாடுகளில் இருக்கக்கூடிய பேரறிஞர்களையும், பேராசிரியர்களையும் குறுகிய காலத்திற்காவது இங்கு வரவழைத்துச் செயற்பட வைக்கவேண்டும் என்ற உணர்வு யாழ். மக்கள் மத்தியில் வேரூன்றி இருக்கின்றது.

திறமையும், புலமையும் மிக்க யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர்கள் தக்க வழிகாட்டிகள் இல்லாமல் வைத்தியத் துறையை முழுமையாகப் பூர்த்தி செய்யமுடியாத நிலையிலுள்ளனர்.

மருத்துவத்துறையில் நிபுணத்துவம் மிக்கவர்களை, மண்ணையும் மக்களையும் நேசித்து அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடியவர்களை உலகெல்லாம் தேடிக்கண்டு பிடித்து நம் மண்ணுக்கு அழைத்துவருகின்ற மிகப்

**கேசரி**

பெரும் பணியை மையமாக வைத்தேஇந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

கல்விமான்கள், நலன்விரும்பிகள், ஆர்வலர்கள், ஆதரவாளர்கள் ஆதியாம் பொது மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒளிகுன்றி, தரம் குன்றி நிற்கின்ற எமது மருத்துவபீடத்தை ஒரு கலங்கரை விளக்கமாக ஆக்குவதற்கு ஆக்கபூர்வமான உதவிகளையும், ஆதரவினையும் வழங்க ஈழம் வாழ் தமிழர்களதும் கடல்கடந்து வாழ்கின்ற தமிழர்களதும் கரங்கள் உயர வேண்டும்—என்றார்.

★

# பாடசாலையை விட்டு விலகுவோர் விசேட அ.அட்டை பெறுவதில் சிரமம்

வலி வடக்கு, நவ. 16

பாடசாலை விட்டு விலகும் மாணவர்களும் விசேட அடையாள அட்டை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களையும் அனுபவிக்கின்றனர்.

பாடசாலையில் கல்வி கற்கும் போது பெற்ற விசேட அடையாள அட்டையை பாடசாலையை விட்டு விலகும் போது உரிய பாடசாலையில் ஒப்படைக்க வேண்டும். இதனைப் பெற்றுக் கொண்டதும் பாடசாலை அதிபர்கள் விசேட அடையாள அட்டையை மீளப் பெற்றுக் கொண்டதைஉறுதிப்படுத்திக் கடிதம் கொடுத்துவிடுகின்றனர்.

மீண்டும் புதிய விசேட அடையாள அட்டைக்கு கிராம அலுவலர்கள் மூலம் அதிபரின் கடிதம் முன்னைய விசேடஅடையாள அட்டைப் பிரதி என்பவற்றையும் விண்ணப்பிக்கின்ற போதிலும் கூட அவர்களுக்கு விரைவாக விசேட அடையாள அட்டை கிடைக்கப்பெறுவதில்லை என்று கவலை தெரிவிக்கப் படுகிறது.

முதல் தடவை விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிப்பவர்கள் போன்றே பல்வேறு படிமுறைகளின்படி இவர்கள் விண்ணப்பிக்க வேண்டி உள்ளது.

பல மாணவர்கள் இதற்கு விண்ணப்பித்து நான்கு மாதங்களாகிய போதிலும் கூட விசேட அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியாது பல்வேறு சிரமங்களையும் அனுபவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

(ஐ-86)

## நூல் வெளியீடு

குருநகர், நவ. 16

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த அன்ரனி பீற்றரின் (அபீர்ராஜன்) 'மன ஓசைகள்' கவிதைத் தொகுதி நூல் அறிமுக விழா எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிக்கு யாழ். மறைக் கல்வி மண்டபத்தில் துரை ஆரோக்கியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை யோசப் பாலாவும், சிறப்புரையை முன்னாள் யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ சி. வேலாயுதமும்நிகழ்த்துவர். யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே. பி. ஈ. செல்வராசா அடிகள் நூலை வெளியிட்டு வைப்பார்.

(ஐ-51)

# விதை உருளைக்கிழங்கு வந்துசேர்வது தாமதம்

## விவசாயிகள் காத்திருப்பு

புன்னாலைக்கட்டுவன், நவ. 16

யாழ். மாவட்டத்திற்கு விதை உருளைக்கிழங்குகள் எடுத்து வரப்படுவது இந்த முறை தாமதமாகுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த வருடம் தனியார் அமைப்புக்களே விதை உருளைக்கிழங்குகளை கொழும்பில் இருந்து குடாநாட்டுக்கு எடுத்து வரும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட போதும் பருவ காலம் முடியும் தறுவாயிலும் விதை உருளைக்கிழங்குகள் வந்து சேரவில்லை. பயிற்செய்கைக்கு காத்திருக்கும் விவசாயிகள் இதனால் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

(ஐ-8-133)

# புன்னாலைக்கட்டுவன்பகுதியில் மலேரியாபரவுவது அவதானிப்பு

புன்னாலைக்கட்டுவன், நவ. 16

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் தற்போது நுளம்புகளின் பெருக்கத்தால் மலேரியா நோய் வேகமாகப் பரவி வருகிறது.

கடந்த மாதம் மட்டும் இப் பகுதியில் இருந்து 60 பேர் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர் என இந்தப்பகுதி மருத்துவப் பதிவுகள் மூலம் தெரியவருகிறது.

இந்தப் பகுதி மக்கள் தற்போது சுற்றுப் புறங்களை துப்புரவு செய்து நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் அக்கறை காட்டுகின்றனர். (ஐ-8-133)

**நாளை**

கார்த்திகை 1

புதன்கிழமை

திதி: நவமி

முன்னிரவு 10.15 வரை;

நட்சத்திரம்: சதயம்

நள்ளிரவு 12.32 வரை.

[illegible]நேரம்: 4.38 — 6.08

ராகுகாலம்: 12.0[illegible] — 1.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஒரு நாட்டின் பெருமை அதன் வளங்களில் இல்லை. அதன் உறுதி, நம்பிக்கை, [illegible] தான் இருக்கிறது.

— ஹோப்கின்

# வடலியடைப்பு பயனாளிகளுக்கு கடனுதவி

சண்டிலிப்பாய், நவ. 16

அகதிளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நுண் கருத் திட்டத்தின் கீழ் வடலியடைப்பு கிராமத்தைச்சேர்ந்த 56 பயனாளிகளுக்கு சுய தொழில் முயற்சிக்கானகடன் வழங்கப்பட்டுள்ளது

விவசாயம், மேசன் தொழில், சிறு கைத்தொழில் ஆகிய சுய தொழில் முயற்சிக்காக மொத்தம் ஐந்து லட்சம் ரூபா இவர்களுக்கு வழங்கப் பட்டது. சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து அண்மையில்பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். செல்வராசா இதற்கான கொடுப்பனவை மேற்படி பயனாளிகளுக்கு வழங்கினார் சண்டிலிப்பாய் பிரிவு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

(ஐ-135)

## வாய்க்கால் புனரமைப்பு

நாவற்குழி, நவ. 16

தனங்களப்பு முள்ளிப்பிட்டி வாய்க்கால், கள்ளியடிக்குள வாய்க்கால், அறுகுவெளி பிள்ளையார் கோயில வாய்க்கால் ஆகியன பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் உதவியுடன் தனங்களப்பு விவசாய சம்மேளனத்தினால் திருத்தி அமைக்கப்பட்டு வருகின்றன-

இந்த வாய்க்கால்கள் கடந்த பல வருடங்களாக புனரமைக்கப்படாமல்இருந்ததாகவும்—

இதனால் இந்தப் பகுதி விவசாயிகள் தொழில் ரீதியாக பெரும் பாதிப்பை எதிர் நோக்கியதாகவும்—

விவசாய சம்மேளனத் தலைவர் தெரிவித்தார்.

(ஐ-8-102)

## வெள்ளி விழா நிகழ்வு

குருநகர், நவ. 16

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட் செல்வி ஜி. செல்வராணியின் வெள்ளி விழா நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் உப அதிபர் எம். ஆரோக்கியநாதர் தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ் வலயக்கல்வித்திணைக்கள கணக்காளர் த. சுதந்திரபாலன் சிறப்பு விருந்தினராகவும், யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜே. பி. ஈ. செல்வராசா அடிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

பாடசாலைமாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

[ஐ-51]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீதி ஒழுங்குகள் பற்றி மாணவருக்கு போதிக்க அதிபர்களுக்கு ஆலோசனை

வலிகாமம் தெற்கு, நவ. 16

அண்மைக்காலமாக எமது பிரதேசத்தில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இவ் விபத்துக்களுக்குக்காரணம்பல இருப்பினும் பொதுமக்களும், மாணவர்களும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறையை பேணாமையே முக்கிய காரணமாகும். எனவே பாடசாலையில் மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு முறையை விளங்கப்படுத்தி அறிவுரை வழங்குமாறு வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் சைக்கிளில் செல்லும் போது இரண்டு மூன்று பேர்கள் வீதியின் குறுக்கே சமாந்தரமாக கதைத்துக் கொண்டு செல்வதும் அருகருகே கை கோர்த்துக் கொண்டு செல்வதும், வயது குறைந்தவர்கள் —குறிப்பாக மாணவர்கள்— மோட்டார் சைக்கிள் செலுத்துவதும் வீதி விபத்துக்களை அதிகரிக்கச் செய்கின்றன.

எனவே இவற்றை தவிர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதுடன் தேவைப்படுமிடத்து யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரால் வெளியிடப்பட்டுள்ள வீதி ஒழுங்கு முறை தொடர்பான வீதி ஒழுங்கு நூல் புத்தகத்தை வாங்கி பயன்படுத்துமாறும் கல்விப் பணிப்பாளர் ஆலோசனை வழங்கி உள்ளார்.

(ஐ-152)

# பிரதேச செயலக ரீதியாக மதகுருமாரின் விவரங்கள்

சகல வழிபாட்டுத் தலங்களினதும் மதகுருமார்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் சகல பிரதேச செயலர்களுக்கும் இது தொடர்பான சுற்றறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு மதகுருமார்களின் விவரங்கள் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டியிருப்பதால் பிரதேச செயலக ரீதியாக அவ்வப் பிரதேசங்களிலுள்ள மதகுருமார்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அரச அதிபர் பிரதேச செயலர்களை பணித்துள்ளார்.

# மின்தடை

சுழிபுரம், நவ. 16

சுழிபுரம் பிரதேச சபைப் பகுதி மக்கள் கடந்த சில வாரங்களாக தினமும் மின் தடையால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இரவு எட்டு மணி தொடக்கம் ஒன்பது மணி வரையிலான நேரத்திலேயே இந்த மின் தடை ஏற்படுகிறது. முக்கியமாக மின்சாரம் தேவைப்படும் இந் நேரங்களில் தான் மின்தடை ஏற்படுகிறது என அப் பகுதி மின் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ-8-28)


## கண்ணீர் அஞ்சலி

எமது திணைக்களத்தைச் சேர்ந்த விலைமதிப்பீட்டுப் பரிசோதகர்

மா. வை. செல்வநாயகம்

அவர்களின் அன்புத் தந்தையார்

**மா. வைரமுத்து**

அவர்கள் 14-11-99 இல் மரணித்தமையால், துயருற்றிருக்கும் அனைவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். விலைமதிப்பீட்டுத் திணைக்கள ஊழியர்களும் நலன்புரிச் சங்கமும்.

விலைமதிப்பீட்டுத் திணைக்களம்,
இல. 148, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (71008)


# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம் மாதம் 14 ஆம் திகதி வரை[ பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

சாவகச்சேரி

[110502 ஏ[, [110502பி[, [110502 சி], ]110502 டி[, ]096767 ஏ[, [096767 பி], [120822 ஏ], (123274 ஏ], ]123274 பி], [126150 ஏ), (126179 ஏ), (123687ஏ), [123687 பி), (123687 சி[, [123687 டி[, (123687ஈ), [126025 ஏ].

யாழ்ப்பாணம்

[117600 ஏ],[122537 ஏ[, [122537 பி[, [122585 ஏ], [124584 ஏ], ]124679 ஏ[, [124741 ஏ[, [124741 பி], [124813 ஏ[, [124813பி], [124832 ஏ] [124938 ஏ[, [124947 ஏ], [124953 ஏ[, [126552 ஏ], [126601 ஏ], [126601 பி[, [126601 சி], [126601 டி], [126612 ஏ], [126661 ஏ].

கரவெட்டி

[114242 ஏ].

கோப்பாய்

[121171ஏ], [122977 ஏ], [123099 ஏ[, [123099 பி[, (123099 சி), (123100 ஏ), [123100 பி], [123106 ஏ], [123112 ஏ], [123112பி], [123136 ஏ[, [123136 பி[, (123155 ஏ), (123155 பி), [123166 ஏ], [123166 பி[, (123167 ஏ), [123167 பி[, [123167 சி], [123169 ஏ]

நல்லூர்

(110460ஏ), (117528ஏ), (117545ஏ), (117547ஏ), (117578ஏ), (117627ஏ), (117716ஏ), (122908ஏ), (122920ஏ), (122920பி), (122977பி), (122977சி), (122977டி), (122989ஏ), (122989பி), (123020ஏ), (123023ஏ), (123047ஏ), (123048ஏ), (123049ஏ), (123152ஏ), (123163ஏ), (123163பி), (123208ஏ), (123209ஏ), (124289ஏ), (124291ஏ), (124310ஏ), [124310பி), (124835ஏ), [123578ஏ), (125092ஏ).

சண்டிலிப்பாய்

(118457ஏ), [118457பி), [121586ஏ), [123529ஏ), (123549ஏ), (123549பி), (123549சி), (123549டி), [123549ஈ], (125205ஏ), (125205பி), (125214ஏ), (125230ஏ), [125328ஏ), [125336ஏ], (125336பி], (125384ஏ), (125384பி), (125451ஏ), (125452ஏ).

தெல்லிப்பழை

(117698ஏ), (121466ஏ), (121466பி), (125386ஏ).

உடுவில்

(123873ஏ), (108634ஏ).

# குடத்தனையில் 30 பேருக்கு காணி உறுதிகள் கையளிப்பு

நெல்லியடி, நவ. 16

காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் சுவர்ணபூமித்திட்டத்தின் 85 ஆம் ஆண்டு காணிகள் வழங்கப்பட்டிருந்த குடத்தனையைச் சேர்ந்த 30 குடும்பங்களுக்கு உறுதிகள் கடந்த வாரம் கையளிக்கப்பட்டன.

இவ் வைபவம் பொற்பதி கிராம சேவை அலுவலர் ரீவதனரூபனின் அலுவலகத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பி. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஒப்பிலாமணி, மணற்காடு கிராம சேவை அலுவலர் தோமஸ்யூட், குடத்தனை கரையூர் கிராம சேவை அலுவலர் எஸ். பஞ்சலிங்கம், அம்பன் பணிமனை கிராம சேவையாளர் எஸ். சிவலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

'சுவர்ணபூமி' உறுதிகளை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பி. வேலாயுதபிள்ளை ஒவ்வொரு குடும்பங்களிலுமுள்ள குடும்பத் தலைவரிடம் கையளித்தார் (ஐ-109

# பரிசளிப்பு விழா

குருநகர், நவ. 16

யாழ் திருக்குடும்பக் கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு வைபவம் நாளை புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ள உள்ளார்.

(ஐ-51)

# 3 ஆம் தவணைப் பரீட்சை

புன்னாலைக்கட்டுவன், நவ. 16

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் தரம் 10 வரையிலான மாணவர்களுக்கான மூன்றாந்தவணை வகுப்பேற்றப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாக உள்ளன. தற்போது தரம் 11 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றது. [ஐ-133]


## பருத்தித்துறை பிரதேச சபை-புலோலி

## 2000 ஆம் ஆண்டுக்கான

## கேள்வி அறிவித்தல்

(பொதுச் சந்தை, இறைச்சிக் கடைகள்)

பருத்தித்துறை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக் கடைகள் என்பவற்றை 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 1999-11-30 ஆம் திகதி பிற்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் பருத்தித்துறை பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் உரிய கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப்பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 1999 11-29 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்

கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தி 'தலைவர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி' என்ற முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகையின் பெயர் எழுதப்பட்டு, அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 1999-11-30 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 1999-11-30 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ பிரதிநிதியோ சமுகமளிக்கலாம். கேள்விப்பத்திரம் பெறுபவர்கள் அடையாள அட்டையையும் தவறாது கொண்டுவருதல் வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் அல்லது அதன் பகுதியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு அதிகாரமுண்டு. இது சம்பந்தமான மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை

| | குத்தகை விவரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01. | மந்திகை மாட்டிறைச்சிக் கடை | 1,53,100/- | 3,000/- | 150/- |
| 02. | மாணான்டி மாட்டிறைச்சிக் கடை | 52,100/- | 3,000/- | 150/- |
| 03. | நாகர் கோயில் மாட்டிறைச்சிக் கடை | 6,000/- | 1,500/- | 150/- |
| 04. | செம்பியன்பற்று மாட்டிறைச்சிக் கடை | 5,000/- | 1,500/- | 150/- |
| 05. | மணற்காடு மாட்டிறைச்சிக்கடை | 5,000/- | 1,500/- | 150/- |
| 06. | மந்திகை ஆட்டிறைச்சிக்கடை | 16,200/- | 1,500/- | 150/- |
| 07. | அல்வாய் சந்தை] ஆட்டிறைச்சிக் கடை | 15,200/- | 1,500/- | 150/- |
| 08. | மந்திகை சந்தை | 70,200/- | 1,500/- | 150/- |
| 09. | மாணான்டி சந்தை | 33,010/- | 1,500/- | 150/- |
| 10. | கற்கோவளம் சந்தை | 1,100/- | 500/- | 150/- |
| 11. | கெருடாவில் சந்தை | 750/- | 500/- | 150/- |
| 12. | மருங்கேணி சந்தை | 7,500/- | 1,500/- | 150/- |
| 13. | நாகர் கோயில் மீன் சந்தை | 25,000/- | 1,500/- | 150/- |
| 14. | மாமுனை மீன் சந்தை | 10,000/- | 1,500/- | 150/- |

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே. பி. யூ. எம்.
தலைவர்
பருத்தித்துறை, பிரதேச சபை.

பருத்தித்துறை பிரதேச சபை,
புலோலி. [சி/9843]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளையாட்டரங்கு

## இலங்கை-ஸிம்பாப்வே டெஸ்ட் போட்டி நாளை மறுதினம் ஆரம்பமாகின்றது

கொழும்பு, நவ. 16

இலங்கை அணி சார்ஜா போட்டிகளில் பங்கு பற்றியதை அடுத்து ஸிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளது.

ஸிம்பாப்வேயில் இலங்கை அணி விளையாட உள்ள ஆட்டங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

★ முதலாவது டெஸ்ட் போட்டி நவ. 18 முதல் 22 வரை கியூன்ஸ் விளையாட்டு மைதானம்.

★ இரண்டாவது டெஸ்ட் போட்டி நவ. 26 முதல் 30 வரை ஹறாரே விளையாட்டு மைதானம்.

★ மூன்றாவது டெஸ்ட் போட்டி டிசெ. 4 முதல் 8 வரை ஹறாரே விளையாட்டு மைதானம்.

ஒருநாள் போட்டிகளில் முதல் போட்டி டிசெம்பர் 11 ஆம் திகதியும் இரண்டாவது போட்டி 12 ஆம் திகதியும் மூன்றாவது போட்டி 15 ஆம் திகதியும், நான்காவது போட்டி 18 ஆம் திகதியும் ஐந்தாவது போட்டி 19 ஆம் திகதியும் நடைபெறும்.

இதுவரை இலங்கை அணி ஸிம்பாப்வே அணியுடன் 7 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 4 போட்டிகளில் வெற்றியும் 3 போட்டிகளில் சமநிலையும் அடைந்துள்ளது. 8 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 5 போட்டிகளில் வெற்றியும் 3 போட்டிகளில் தோல்வியும் அடைந்துள்ளது.

எது எவ்வாறாயினும் ஸிம்பாப்வேக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற்கொண்டுள்ள இலங்கை அணியில் அணியின் முத்த வீரர்களான அரவிந்த, அர்ஜுன என்போர் இடம் பெறவில்லை. ஆகவே அணியைச் சரிவரக் கொண்டு நடத்தும் பொறுப்பு தலைவர் சனத் ஜெயசூரிய, உபதலைவர் மஹில ஜெயவர்த்தன, மார்வன் அத்தபத்து, றொமேஷ் களுவிதாரண ஆகியோர் கையிலேயே உள்ளது எனக் கிரிக்கெட் அவதானிகள் கருதுகின்றனர்.

தற்போது நடந்துமுடிந்த ஸிம்பாப்வே தலைவர் அணியுடனான 3 நாள்கள் கொண்ட பயிற்சி ஆட்டங்களில் முதலாவது ஆட்டம் மழை காரணமாக சமநிலையிலும் இரண்டாவது ஆட்டம் இலங்கை அணிக்கு வெற்றியாகவும் முடிவடைந்தது. (இ-8-4)

TRRO

COMPUTER TRAINING CENTER

புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்க நாமும் தயாராவோம்!

பெற்றோர்களே!

க. பொ. த உயர்தரக் கல்வியைச் சிறப்பான முறையில் பூர்த்தி செய்த உங்கள் பிள்ளைகள் கொம்பியூட்டர் கல்வியைத் தொடர நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

கொம்பியூட்டர் கல்வியில் ஆர்வமுள்ள இளைஞர்களே! உங்களுக்காக......

- மிக நவீன Pentium III Multimedia கணனிகள்.
- மேலதிக பயிற்சி நேரம்.
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட பயிற்சி அறை
- அனுபவம் வாய்ந்த பயிற்சியாளர்கள்.
- மிகக் குறைந்த பயிற்சிக் கட்டணம் மற்றும் சலுகைகள்.
- விசேட பயிற்சி நெறிகள்.

எமது புதிய பயிற்சி நெறிகள்

DIPLOMA in MICROSOFT OFFICE 2000

Certificate Courses are

- Ms Word 2000
- Ms Excel 2000
- Ms Access 2000
- Ms Power Point 2000
- Pascal
- Dbase III +
- C/C ++
- Visual Basic 6.0
- Coral Row

பயிற்சி நெறி ஆரம்பம்:- Dec. மாதம்

விண்ணப்ப முடிவு திகதி;- 30 - 11 - 99

மிகக் குறைந்த கட்டணத்தில்......

- Laser Printing
- Dotmetic Printing and
- Stencil Cutting

வெற்றிகரமாக 2 ஆவது ஆண்டில்

நிர்வாகம்,
TRRO,
கொம்பியூட்டர் பயிற்சி நிலையம்,
4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்:- 2416

(ஒ/9847)

## ரஷ்யா--கியூபா இறுதி ஆட்டத்தில்

ஜப்பான், நவ. 16

சர்வதேச மகளிர் கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஜப்பானில் இன்று நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்தில் ரஷ்ய அணியும் கியூபா அணியும் மோதவுள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற ரஷ்ய — சீன அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில் 4 – 0 என்ற கணக்கில் ரஷ்ய அணியும் கியூபா—ஜப்பான் அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில் 3 – 0 என்ற கணக்கில் கியூபா அணியும் வெற்றி பெற்று இறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டன.

இதன் மூலம் வெற்றிபெற்ற இந்த இரண்டு அணிகளும் ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடுவதற்கு வாய்ப்புப் பெற்றுள்ளன. (இ-4)

## அதிபார குத்துச் சண்டை சாம்பியனாக லூயிஸ்

லாஸ்வெக்காஸ், நவ. 16

உலக அதிபார குத்துச் சண்டை வெற்றிக் கிண்ணத்துக்காக கடந்த 13 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள லாஸ் வெக்காஸில் நடைபெற்ற போட்டியில் அமெரிக்கரான இமென்டன் ஹொலிவீல்ட்டை வெற்றிபெற்று பிரிட்டனின் லொனெல்ட்ஸ் லூயிஸ் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

இருப்பினும் 3 லட்சம் டொலர் கட்டணம் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சை காரணமாக ஹொலிவீல்ட்டின் சர்வதேச குத்துச்சண்டைப் பட்டி லூயிஸுக்கு வழங்கப்படவில்லை.

முன்னதாக இவர்கள் இருவருக்கும் இடையில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்ததைத் தொடர்ந்தே இந்தப்போட்டி ஒழுங்குசெய்யப்பட்டது. (இ-4)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 16

சென்.ஜோன்ஸ்கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு — பாரதி வி. க. எதிர் பாடுமீன் வி.க.

★ மாலை 5-15 மணிக்கு— யாழ் பல்கலைக்கழகம் எதிர் றோயல் வி க. [இ-3-4]

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ். ஹற்றன் நஷனல் வங்கி பாடசாலைகள் மற்றும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3-30 மணிக்கு —சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி எதிர் யாழ்ப்பாணக்கல்லூரி அணி.

★ மாலை 4-30 மணிக்கு— சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பீ' அணி எதிர் யாழ். மத்திய கல்லூரி 'ஏ' அணி [இ 3-8]

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 16

அரியாலை மத்தி இளைஞர் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகத்தின் விளையாட்டு அவை ஏற்பாடு செய்துள்ள பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று இடம் பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3 மணிக்கு — விக்ரம் வி. க. அணி எதிர் கலைமகள் வி.க. 'ஏ' அணி.

★ பிற்பகல் 4-30 மணிக்கு - அரியாலை ஐ க. 'ஏ' அணி எதிர் நொதேண் 'ஏ' அணி. [இ-3-8]

## தராசுகளுக்கு முத்திரை

கொழும்புத்துறை, நவ. 16

வலி கிழக்கு பிரதேச சபையின் — அச்சுவேலி உப அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் வியாழன், வெள்ளி ஆகிய நாள்களிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 1. 30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரை இடும்பணி நடைபெறும். இ-30)

## குண்டு வெடிப்பில் நால்வர் காயம்

கொழும்பு, நவ. 16

நீர்கொழும்பு ரெலிக்கொம் நிறுவனத்துக்கு முன்பாகவுள்ள இரண்டுமாடிக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இரவு 9 30 மணியளவில் குண்டு ஒன்று வெடித்ததில் நால்வர் காயம் அடைந்தனர். (இ-3-6)

## கலைப்பீட மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பகிஷ்கரிப்புக்கான காரணத்தை விளக்கி துணைவேந்தருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மூன்றாம் ஆண்டு மாணவர்கள் தாம் ஆரம்பித்துள்ள பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கான காரணத்தை விளக்கிப் பல்கலைக்கழக துணை வேந்தருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்

அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

எமது சக மாணவன் செ. சுகந்தனை விடுதலை செய்வது தொடர்பாக பல்வேறுபட்ட நடவடிக்கைகளைத் தாங்கள் இதுவரை காலமும் மேற்கொண்டமைக்கு எமது மனமார்ந்த நன்றிகளை மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்களாகிய நாம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனால் இந்த மாணவனின் விடுவிப்புத் தொடர்பாகத் தாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குச் சம்பந்தப்பட்ட தரப்பினர்களால் பல வாக்குறுதிகள் தரப்பட்டன. இதனை ஏற்றே நாம் இதுவரை காலமும் விரிவுரைகளுக்குச் சமுகமளித்து வந்தோம். ஆனால் அவர்களால் தரப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பாக இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் எமது சக மாணவன் பரீட்சையை பூர்த்தி செய்யவேண்டிய நிலையிலுள்ளமையாலும் விரிவுரைகளுக்கு சமுகமளிக்க முடியாத நிலையிலும் உள்ளான். இந்தநிலையில் நாமும் தொடர்ந்து விரிவுரைகளுக்குச் சமுகமளிப்பதற்கு எமது மனம் இடந்தருகின்றது இல்லை.

தாங்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலேயே எமது பல்கலைக் கழகத்தினைக் கொண்டு நடத்துகின்றீர்கள் என்பது எமக்குத் தெரியும். இருப்பினும் எமது சக மாணவனின் நிலைமை எதிர்காலத்தில் இந்தப் பல்கலைக்கழகத்தின் செயற்பாட்டில் தடங்கலை ஏற்படுத்தக் கூடும். எனவே தாங்களும் துறைத் தலைவர்களும் இந்த விடயம் தொடர்பாக உடன் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுகொள்கின்றோம்.

சுகந்தனின் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒரு மாணவன் அவரதும் அவ

(10 ஆம் பக்கம் பார்க்க)

A/L 2001

Chemistry
Inorganic
ஆரம்பம்: 17-11-99
Wed. 5-00 p.m
Mr. அன்பு

C. Maths
நிகழ்தகவு
Mr.சிவலோகநாதன்

SHAMROCK

(ஒ/9850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போது நடைபெறுகின்ற யுத்தம் இந்த நாட்டுக்கு சாபக்கேடு ஆகும்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 16

''இனப் பிரச்சினை தொடர்பாக நடைபெற்று வரும் யுத்தம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடாகும்'' இப்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

வாரியப்பொலவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை ஏற்றுக்கொண்ட முதலாவது அரசாங்கம் எமது அரசாங்கமே. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இனப்பிரச்சினை காரணமாக நடைபெற்று வரும் யுத்தம் நாட்டுக்கு ஒரு சாபக்கேடாகும். யுத்தத்தை வெறுத்து சமாதானத்தை நிலைநாட்ட உடனடித் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்தத் தீர்வுக்கு இடையூறாக 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசமைப்பு விளங்குகின்றது. எனவே இதனை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

எனவே தான் மீண்டும் மக்கள் ஆணையைப் பெற்று அரசமைப்பைத் திருத்தி நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வந்துள்ளேன்.

இனப் பிரச்சினைத் தீர்வு பற்றி ரணில் விக்கிரமசிங்க பேசி வருகின்றார். தான் முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தை அவர் வெளியிட வேண்டும்-என்றார். (இ-3-8)

## மீட்டல் பயிற்சி வகுப்பு

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சைக்கு உடற்கல்விப் பாடத்தைத்தொழில் நுட்பப் பாடமாக தோற்ற இருக்கும் மாணவர்களுக்கான மீட்டல் பயிற்சி வகுப்புக்களை யாழ். கல்விவலயம் நடத்தவுள்ளது.

இம்மாதம் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் காலை 9.30 முதல் யாழ். கல்வி வலய கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த வகுப்புக்களுக்கு யாழ் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களை அனுப்பி வைக்குமாறு உதவி உடற்கல்விப் பணிப்பாளர் அதிபர்களை கேட்டுள்ளார். (இ-4)

## உயர் தொழில் நிறுவனத்தின் நிரந்தர விரிவுரையாளர்களுக்கு இடர்கால கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ் உயர் தொழில் நிறுவனத்தில் கடமையாற்றும் நிரந்தர விரிவுரையாளர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவு இதுவரையும் வழங்கப்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதனை வழங்குவதற்கான முயற்சிகளில் உயர் தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ரி.ஏ. பியசிறி முயற்சிகளை மேற்கொண்டுள்ளபோதும் —

திறைசேரியின் அங்கீகாரம் கிடைக்காததால் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

(இ-3-5)

## பிஸ்ரல் குழுவுக்கு பொலிஸார் பலி!

கொழும்பு, நவ. 16

மட்டக்களப்பு நகரில் நேற்றுமுன்தினம் மாலை விடுதலைப் புலிகளின் பிஸ்ரல் குழுவினர் மேற்கொண்ட தாக்குதல் ஒன்றில் பொலீஸார் ஒருவர் உயிரிழந்தார் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது (இ-7)

## உரிமை கோராத 14 சைக்கிள்கள்

உரிமை கோரப்படாத நிலையில் யாழ் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த 14 சைக்கிள்கள் நேற்று யாழ் நீதிமன்றத்தில் பொலீஸாரினால் ஒப்படைக்கப்பட்டன.

யாழ் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் இந்த சைக்கிள்களின் உரிமையாளர்கள் அடையாளம் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-3-5)

## போதுமான அளவு கையிருப்பு உள்ளது

# பொருள்களை தேவைக்கு அதிகமாக கொள்வனவு செய்ய வேண்டாம்

## நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 16

குடாநாட்டில் போதியளவு அத்தியாவசியப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாக அரச அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே பொதுமக்கள் கூடுதலாகப் பொருள்களைக் கொள்வனவு செய்து பதுக்கலுக்குத் துணை போகக் கூடாது

யாழ்ப்பாண நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் மேற்கண்டவாறு பொதுமக்களைக் கேட்டுள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பிரதேசத்தில் அத்தியாவசியப் பொருள்களான சீனி, அரிசி, மண்எண்ணெய் போன்றவற்றைப் பெறுவதற்கு மக்கள் முண்டியடித்துக்கொண்டு கடைகளில் வரிசையில் நிற்பதைக் கடந்த இரு நாள்களாகக் காண முடிந்தது. நாட்டில் பிரச்சினை எங்கே நடந்தாலும் பொருள்களின் விலை கூடிவிடும் என்பது எம்மைப் பொறுத்தவரை உண்மைதான். மக்கள் அவசரப்படுவதைச் சாட்டாகக் கொண்டு பொருள்கள் பதுக்கப்படுவதும் விலையேற்றி விற்பதும் கூட நடைபெறாமலில்லை

யாழ். மாவட்டத்துக்கு இன்று வரை கப்பல் மூலம் தான் பொருள்கள் தருவிக்கப்படுகின்றன. நாம் யாழ், கச்சேரியில் திட்டமிடல் பொறுப்பதிகாரியுடனும் வர்த்தக சங்கத்துடனும் இந்த விடயம் தொடர்பாகப் பேசியதில் இருந்து சீனி, அரிசி, மண்எண்ணெய் போன்ற பொருள்கள் போதியளவு கையிருப்பில் உள்ளதாகவும் எவ்வித தட்டுப்பாடும் தற்போதைக்கு ஏற்பட மாட்டாது எனவும் தெரியவந்துள்ளது

ஆகவே பொருள்களை தேவைக்கு அதிகமாக வாங்கி வீடுகளில் தேக்கி வைத்து தற்காலிக தட்டுப்பாட்டை ஏற்படுத்தாதவாறு மக்கள் பார்த்துக் கொள்ளுதல் இன்றைய தேவை ஆகும்.

நாம் பொருள்களை தேவைக்கு அதிகமாக வாங்கும்போது வர்த்தகர்கள் விலையைக் கூட்டி விற்பதற்கும் தற்காலிக தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் வழி வகுப்பதாக அமைகிறது. ஆகவே பொது மக்கள் பொருள்களின் விலை உயராதது விழிப்பாக இருக்க வேண்டும் — என்றுள்ளது

அதேசமயம் யாழ் குடாநாட்டில் போதியளவு எரிபொருள்கள் கையிருப்பில் உள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் யாழ் பதில் பிரதேச முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயலும் சிலராலேயே இப்படியானதொரு நிலைமை ஏற்பட்டதாகவும் —

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்பும் கப்பலில் எரிபொருள் எடுத்துவரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3-10-9)

## தனிமையில் வாழ்ந்தவர் மரணம்

தனியாக வாழ்ந்த குடும்பஸ்தர் சடலமாக காணப்பட்ட சம்பவம் கடந்த சனியன்று கச்சாய் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வாரித்தம்பி கணபதிப்பிள்ளை (வயது 52) என்னும் நான்கு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார். இவரது மனைவி பிள்ளைகள் வன்னியில் உள்ளதாகவும் அண்மையில் ஒட்டுசுட்டான் தாக்குதலின் போது இவரது மகன் பலியான செய்தி கிடைத்த நாள் முதல் இவர் உணவு ஏதும் சாப்பிடாமல் மது அருந்தி வந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி செ. ஜமுனானந்தா பிரேத பரிசோதனை நடத்தினார்.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. தர்மேந்திரா விசாரணை நடத்தி அளவுக்கதிகமாக மது அருந்தியதால் மரணம் சம்பவித்ததாக தீர்ப்பு வழங்கினார்.

கொடிகாமம் பொலீஸ் நிலைய கான்ஸ்டபிள் டேவிட் சாட்சிகளை நெறிப்படுத்தினார். (ஐ-117)

## விலை உயர்வு

சாவகச்சேரிச் சந்தையில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன. கத்தரிக்காய் 40 ரூபாவாகவும் பாகற்காய் 100ரூபாவாகவும் கரட் 60 ரூபாவாகவும் பயற்றங்காய் 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது. (இ-31)

### பகிஷ்கரிப்புக்கான...

[9 ஆம் பக்கம் தொடர்]

ருடன் கற்கும் எமதும் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு சுகந்தனை உடன் விசாரணை செய்யுங்கள் அல்லது உடன் விடுதலை செய்யுங்கள் என்ற எமது கோரிக்கையினைச் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வலியுறுத்துங்கள்.

எமது சக மாணவனின் விசாரணை அல்லது விடுதலை தொடர்பாக எதிர்வரும் 19ஆம் திகதிக்குள் எமக்கு ஓர் ஆக்கபூர்வமான முடிவினைத் தெரிவிக்க வேண்டும். சுகந்தனின் கைது தொடர்பாக எமது பீடத்தின் ஏனைய வருட மாணவர்களும் ஏனைய பீட மாணவர்களும் மிகுந்த மன வேதனை அடைந்துள்ளார்கள்

சுகந்தனின்விடுதலைதொடர்பான அறிவித்தல் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன் வெளிவராத பட்சத்தில் ஏனைய பல்கலைக்கழக பீட மாணவர்களும் விரிவுரைகளுக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்படும். இது எதிர்காலத்தில் பல்கலைக்கழகத்தின் முழுச் செயற்பாடும்ஸ்தம்பிக்க கூடிய நிலையை ஏற்படுத்தலாம். இந்த நிலையை நாங்கள் விரும்பவில்லை தாங்களும் விரும்பமாட்டீர்கள். சம்பந்தப்பட்ட தரப்பினரும் வரவேற்கப் போவதில்லை. எனவே எமது கோரிக்கையை சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உடன் தெரியப்படுத்துங்கள் எமது நிலையை தெளிவுபடுத்துங்கள்.

சுகந்தனினதும், பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரினதும் எதிர்காலம் இனி உங்கள்கையிலேயே தங்கியுள்ளது. சுகந்தனின் விடுதலை மூலம் நாம் யாழ்ப்பாணத்தில் ஒரு சுமுகமான பாதுகாப்பான சூழ்நிலையில் தொடர்ந்து கல்வி நடவடிக்கையை தொடர முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி தர வேண்டியது தங்களினதும், சம்பந்தப்பட்ட தரப்பினரதும் தலையாய கடமை ஆகும். இல்லையேல் ஒவ்வொரு மாணவனும் சுயமாக சிந்தித்து தங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கூடிய ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படும் வரை தங்களின் கல்வி நடவடிக்கையை பிற்போட வேண்டி ஏற்படலாம்.

இது கூட தங்களையோ சம்பந்தப்பட்ட தரப்பினரையோ உடனடியாக பாதிக்கப்போவதில்லை. ஆனால் எதிர்காலத்தில் சமூகத்தில் பாரிய பின் விளைவுகளை இது ஏற்படுத்தும் என்பதனை மட்டும் உறுதியாக கூறிக் கொள்ள விரும்புகின்றோம் —என்றுள்ளது (இ-3-7)

### காயமடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

காயமடைந்த 40 பேரில் ஐவர் பொலீஸார் என்றும் —

படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த சப் இன்ஸ்பெக்டர் கண்டவன திஸநாயக்கவே உயிரிழந்தவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் பிரதிப் பொலீஸ் மா அதிபர்கள் மூவர் தலைமையில் குழுக்கள் அங்கு சென்றுள்ளன என்றும் —

அந்தக் குழுக்கள் நேற்று மாலை வரை 70 பேரை விசாரணை செய்துள்ளன என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-7-8)

### குண்டு...

(முதலாம் பக்கத் தொடர்)

அமைக்கப்பட வேண்டும் - இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம்—

எப்பாவல குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான செய்திகளை சில பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் திரித்துக் கூறுவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுமக்கள் தொடர்பு சாதன கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது.

குறுகிய அரசியல் இலாபங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடனேயே அவை செயற்படுவதாக மேற்படி அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-7)

### பகிஷ்கரிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

அளிக்கவில்லை என்றும்—

இதன் காரணமாக பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளதாகவும்-மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் - மாணவர்கள் தமது போராட்டம் தொடர்பாகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளைக்கு மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இது விடயமாக தாம் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளதாக அவர் மாணவர்களிடம் தெரிவித்துள்ளார். (இ-3 8)

### ஐ.தே.க..

(முதலாம் பக்கத் தொடர்)

என்றும் -

நண்பகலுடன் நகர் வெறிச்சோடிப்போனது என்றும் — கூறப்பட்டது.

இதற்கிடையில் அங்கு பணிபுரிந்த எம். எஸ். எவ். அலுவலகப் பிரதிநிதிகள் தமது அலுவலகப் பணிகளை நிறுத்திக்கொண்டு கொழும்புக்குச் சென்று விட்டனர் என்றும் —

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் எவரும் இன்றி அவர்களது அலுவகம் மூடப்பட்டு இருந்தது என்றும்-- கூறப்பட்டது.

[இ-3-164]

### அத்தியாவசியப்...

(முதலாம் பக்கத் தொடர்)

வுப் பொருள்களுடன் பல கப்பல்கள் வரவிருக்கின்றன என்றும் அரச அதிபர் சுட்டிக் காட்டினார்.

ப. நோ. கூ. சங்கங்களிடமும் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் இருப்பதாகவும் சங்கத் தலைவர்கள் தெரிவித்தனர்.

ச. தோ. ச., மாக்கெட், ப. நோ. கூ. சங்கங்கள், யாழ். செயலகக் களஞ்சியம் மற்றும் தனியார் வர்த்தகர்களிடம் பொருள்கள் தாராளமாக இருந்தபோதும் கடந்த வாரம் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாக வதந்தி பரப்பப்பட்டதுகுறித்தும் இந்தக் கூட்டத்தில் விசனம் தெரிவிக்கப்பட்டது

இவ்வாறானதொரு நிலை ஏற்படும் பொழுது ப. நோ. கூ. சங்கங்கள் தேவையான பொருள்களை விநியோகித்து மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

(இ-3-5)

### பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

றும்—

அங்கிருந்து அவர்கள் போக்குவரத்தைத் தாமே ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும்—யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் மேலும் தெரிவித்தது

அதேபோன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் குறிப்பிட்டகுரான சந்திக்குச் செல்ல வேண்டும் என்றும்—

அங்கிருந்து அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

இது ஒரு தற்காலிக ஏற்பாடு என்றும் யாழ் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org